தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, கார்த்திகை 5 (21-11-'59). சனிக்கிழமை | இதழ் 23

இதயத்தில் வாழும் அண்ணா
எழுத்தாளர் மன்றத்தில்



புகைப்படங்கள்: "புரு".

(விவரம் 7ம் பக்கம்)

கிரேக்கத்தின் உரிமைப் போரில் கலந்து கொள்ள வந்திருந்த பெருங்கவிஞன் லார்டு பைரன் போர் முகாமில் பரவிய விசக்காய்ச்சலில் அவதிப்பட்டு உயிர் நீத்தான். அவனுடைய இறுதி நாள் இது.

அமைதியான ஒரு கூடாரம். அதில் மூக்கி முனகியபடி ஒரு படுக்கையில் படுத்திருக்கிறான் பைரன். அருகில் இரண்டொருவர் சோகமாக அமர்ந்திருக்கிறார்கள்.

பைரன் : (தனக்குள்) கதிரவனின் ஒளி மங்கிக்கொண்டிருக்கிறது. இரவு வருவது தெரிகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் இருட்டு வந்துவிடும். ஆமாம்... இருட்டு...இனி எப்போதுமே இருட்டுதான்.

ஒருவர் : பைரன்! பைரன்! இது இருட்டு அல்ல இரவு இன்னும் வரவில்லை. இது பகல்!

பைர : பகலா?! ஊம் இருக்க முடியாது. இது பகலே அல்ல; இருட்டுத்தான். இரவுதான். எனக்கு எல்லாம் தெரிகிறது. இதயத்தின் அடித்தளத்தில் உறங்கிக்கொண்டிருந்த எண்ணங்கள் அனைத்தும் இதோ மேலே மேலே வருகின்றன. எனக்குத் தெரியும்; சாவுக்கு முன்னால்தான் இவை வருவது வழக்கம். ஒளியிலா சாவுவரும்; இருளில்தான் வரும். அதோ சாவே வருகிறது. வரட்டும், வரட்டும். வந்து விருந்து சாப்பிட்டு மகிழட்டும்!

மற்றொருவர் : பைரன்! இங்கே புதிதாக யாரும் வரவில்லை. நாங்கள்தான் இருக்கிறோம். கவலைப் படாதீர்கள்.

பைர : (சிரித்து) சாவு புதிதாகவா வரும். மனிதனோடே அது வாழ்கிறதே. உங்கள் மூலமே சாவு வரக்கூடாதா என்ன!

முதல்வர் : (திகைத்து) அப்படி ஒன்றும் நடக்காது. நீங்கள் நல்ல நிலையிலேயே இருக்கிறீர்கள். உங்களைச் சாவு அணுகாது. கண்டிப்பாக அணுகாது.

பைர : (மேலும் சிரித்து) பைத்தியம்! சாவு நெருங்க முடியாத மனிதன் உண்டா என்ன? பைரன் மனிதன் தானே?!

இரண்டமவர் : இல்லை. பைரன் மனிதனில்லை. அவன் மகாகவி. இணையற்ற கவிச்செல்வன்!

பைர : இருக்கலாம். ஆனாலும்அவன் மனிதன். ஆண், பெண் என்ற இரண்டு தசைப் பிண்டங்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன். மனிதனில்தான் கவிஞனேதவிர, மனிதனை மிஞ்சிய கவிஞனல்ல. அதனால் சாவு அவனிடமும் வரத்தான் செய்யும்!

இருக்கட்டும்....இன்று தேதி என்ன?

முத : 19-4-1824!

பைர : நான் 1788 ஜனவரி 22-ல் பிறந்தேன். அப்படியானால் இப்போது முப்பத்தி ஆறு வயது முடிந்துவிட்டது. முப்பத்தி ஏழாவது வயது தொடங்கிவிட்டது. இல்லையா?

இர : ஆமாம். அதற்கென்ன இப்போது?

பைர : அதிலேதான் எல்லாம் இருக்கிறது. இப்போது நிச்சயமாக சாவு வரத்தான் போகிறது!

முத : ஏன் பைரன்? ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

பைர : முன்பு ஒரு தடவை, வருங்காலத்தைச் சொல்லும் நாடோடி ஒருத்தி சொன்னாளே, நினைவிருக்கிறதா? ஓ! உங்களுக்கு அது தெரியாதோ? ஆமாம்; உங்களுக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும். அவள் சொன்னாள்: எங்கள் குடும்பத்தில் ஒரு சாபம் இருக்கிறதாம். முப்பத்தாறு வயதுக்கு மேல் எங்கள் குடும்பத்தில் யாரும் வாழ்வதில்லையாம். அது உண்மைதான். ஏனென்றால் என் தந்தை முப்பத்தி ஆறு வயதுக்கு மேல் வாழ்ந்ததில்லை. நானும் இப்போது சாகப்போகிறேன். இன்னொன்றும் சொல்லட்டுமா? எனக்கு எட்டு வயதில் பெண் குழந்தை ஒன்று இருக்கிறது. அதுவும்கூட முப்பத்தாறு வயதுக்குமேல் வாழப்போவதில்லை. நீங்கள் உயிரோடிருந்தால் பின்னால் பாருங்கள்.

இர : அதையெல்லாம் பற்றி இப்போது ஏன் கவலைப்படுகிறீர்கள்? அமைதியாக இருங்கள்.

பைர : அமைதி! எப்போது என்னிடம் அமைதி இருந்தது? என்னுடைய வாழ்க்கையில் அமைதி போய் எத்தனையோ காலமாயிற்று. எட்டாவது வயதிலிருந்தே என்னிடமிருந்துவிடை பெற்றுப் போய்விட்டது அமைதி. ஆமாம். நான் எப்போது காதலிக்கத் தொடங்கினேனோ அப்போது முதலே என் அமைதி போய்விட்டது. எட்டாவது வயதில் நான் மேரி டியூப்பைக் காதலித்தேன். பத்தாவது வயதில் மார்க்கரெட் பார்க்கர். பதினைந்தில் மேரி சாவொர்த். இவையெல்லாம் அப்பழுக்கற்ற காதல்கள். எதையும் எதிர்பார்க்காத, புனிதமான காதல்கள். ஆனால் அவை எல்லாவற்றிலும் தோல்விதான். ஒருவேளை அவை புனிதமானவையாகஇருந்ததுதான்காரணமோ, என்னவோ!

முத : பைரன் இப்பொழுது ஏன் அந்த ஆராய்ச்சி? விடுங்கள்.

பைர : (சிரித்துவிட்டு) இந்தத் தோல்விகள்தான் என்னை அமைதியற்றவனாக ஆக்கிவிட்டன. இவர்களை நான் காதலித்தேனேயொழிய, அவர்கள் என்னைக் காதலித்தார்களா என நான் கேட்டதில்லை. அதனாலேயே எனக்கு அவை பெருந்தோல்விகளாகத் தெரியவில்லை. ஆனால் அதில் மூன்றாவதாக வந்த மேரி சாவொர்த்தின் கதை வித்தியாசமானது. அவளுக்கு அப்போது பதினேழு வயது. எனக்கோ பதினைந்து. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவளைப் பார்ப்பதற்காகவே நான் மாதா கோயிலுக்குப் போனேன். ஒரு நாள் கோயிலை அடுத்த பூங்காவில் அவளைக் கண்டேன். துணிந்து என் காதலை வெளியிட்டேன். அதற்கு அவள் என்ன சொன்னாள் தெரியுமா? ஐயோ! பைரனிடம் ஒருத்தி இப்படிச் சொன்னாள் என்பதைச் சொல்ல இப்போதுகூடக் கூசுகிறது. "உனக்குக் காதல் ஒரு கேடா? நீ சின்னப்பயல். உனக்கு அதெல்லாம் கூடாது' என்று அவள் சொன்னாள். அந்த வார்த்தைகள்தான் என்னைக் கொன்றுவிட்டன. ஆமாம். அதுதான் எனக்குப் பெருந்தோல்வியாய் அமைந்துவிட்டது என் அமைதியை நிரந்தரமாகத் தொலைத்துவிட்டது. அதுதான் இப்போது நீங்கள் காண்கிற பைரனை-பைரனே எதிர்பார்க்காத ஒரு புதிய பைரனை-கவி பைரனை உருவாக்கிவிட்டது. அன்று நான் சபதமேற்றேன், ஒரே பெண்ணை வாழ்க்கை முழுதும் அனுபவிப்பதில்லை என்று. உண்மைதான். அந்தச் சபதம் நிறைவேறத்தான் செய்தது. பிறகு எவளோடும் நான் நீண்ட நாட்கள் வாழ்ந்ததில்லை. வாழ என் மனமும் சூழ்நிலையும் இடந் தரவில்லை. அந்தத் தோல்விகளும், தினமும், கிடைத்த புதுப் புது அனுபவங்களும் என்னைப் பெருங் கவிஞனாக்கிவிட்டன. பெருங் கவிஞனாக ஆனேன். அவ்வளவுதான் என்றாலும் என்னிடம் என்ன அமைதி இருந்தது? ஊம்! ஒரே சபலம். சபலத்தின் குழந்தையாக நான் திகழ்ந்தேன். ஐயோ! வேதனை!

இர : பைரன்! கவலைப்படாதீர்கள்! நீங்கள்தானே எழுதினீர்கள், 'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு' என்று. நீங்களே இப்படிக் கலங்கலாமா?

பைர : 'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு' ஆமாம். நான்தான் எழுதினேன். 'என் தோணி கரையிலே' என்ற கவிதையில் அந்த வரிகள் வருகின்றன. ஆனால் நான் எப்போது கவலைப் படவில்லை? இரவில்கூடப் பயங்கரமான கனவுகளைக் கண்டு நான் கலங்கினேன். படுக்கைக்கு அருகில் மருந்து கெட்டித்த இரண்டு துப்பாக்கிகளை எப்போதும் தயாராக வைத்திருந்தேன். கனவின் இடையில் அலறிக்கொண்டு எழுந்து, வெறும் இடத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டேன். சூனியத்தை நோக்கி வாள் வீசினேன். எல்லாம் எனது நடத்தைகளின் எதிரொலி!

பெண்களை வெறும் போகப் பொருள்களாக்குவதற்காக என்னை நான், உள்ளத்தால் மட்டுமல்ல; உடலாலும் மாற்றிக் கொண்டேன். இயற்கையிலேயே அழகனான நான், என் அழகு மேலும் பொலிவு பெறப் புத்தம் புது உணவு வகைகளை மேற்கொண்டேன். ஒரு நாளைக்கு ஒரு தடவை தான் சாப்பிடுவேன். உடல் பருத்துவிடாதிருக்க-கத்திச் சண்டைகள் போட்டேன். குத்துச் சண்டைகளில் ஈடுபட்டேன். குதிரைச் சவாரி செய்தேன். நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டேன். கிரிக்கெட் விளையாடினேன். நீராவியில் குளித்தேன்.

என்னுடைய அறையை எப்போதும் அழகுப் பொருள்களே நிறைத்திருக்கும். அழகு... அழகு! நான் அழகைத் தேடி அலைந்தேன். என்னுடைய பணியாளர்களைக்கூடப் பெண்களாகவே, அதிலும் அழகிகளாகவே தேர்ந்தெடுத்தேன். என்னுடைய தேவைகளெல்லாம் இரண்டே இரண்டுதான். மது! மாது! ஒன்று சலித்தால் மற்றொன்று.

என்னுடைய அழகைக்கண்டு மயங்கிய எத்தனையோ எழிலரசிகள், சீமாட்டிகள் என் காலடியில் கிடந்தனர். பேரரசி விக்டோரியாவின் அமைச்சர் ஒருவரின் மனைவி, சீமாட்டி, மூதாட்டி லேடி கரோலின் என்ன, சீமாட்டி லேடி ஆக்ஸ்போர்ட் என்ன, ஆடலழகி அகஸ்டா என்ன-எத்தனையோ பேரழகிகள் என் ஏவலுக்குக் காத்துக் கிடந்தனர். ஆயிரமாயிரம் அழகிகள் எனக்குக் காதல் கடிதங்கள், கவிதைகள் எழுதினர். அதிலும் இந்த

ப. புகழேந்தி

அகஸ்டா இருக்கிறாளே, அவள் எனக்கு ஒரு வகையில் தங்கை முறை. அவளுக்கும் எனக்கும் ஏற்பட்ட காதல் உலகப் பிரசித்தம்! எங்களைப் பலவந்தமாகப் பிரித்தார்கள்.

மதுவை வார்த்துத் தர என்னிடம் வகை வகையான அழகிகள் இருந்தார்கள். அவர்கள் அதை வண்ணக் கிண்ணங்களில், வழவழப்பான தட்டுகளில் தந்தார்கள் என்று எண்ணுகிறீர்கள்? இல்லை. வெண்மையாகத்தேய்த்து மெருகிடப்பட்ட (மனிதர்களின்) மண்டை ஓட்டிலேதான் ஊற்றித் தருவார்கள். அந்த மண்டை ஓட்டிலிருந்து வழியும் மதுவையும், அந்த ஒயினை ஒயிலாக ஊற்றித் தரும் மங்கையரையும் ஒருசேரச் சுவைப்பேன் நான்.

ஐயோ! அந்தக் காலம்...! அது யார் வாழ்க்கையிலும் நடக்காத காலம்! அந்தப் பெண்கள்...... அழகு தவழும் அவர்களின் கண்கள்....அது தனிப் போதை!

முத : இப்போது அதெல்லாம் எதற்கு? கொஞ்சம் சும்மா இருங்கள்.

— 11-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்;
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 21—11—'59 | இதழ் 23

ஆர்த்தெழுந்தனர் – கை கோர்த்தெழுந்தனர்!

ஒருமித்த குரலின் பெருவலிவை அரசினர் கண்ணுரக் காண்பதற்கும், கண்டு ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஆன வாய்ப்பை, தமிழகத்து அரசியல் கட்சிகள் உருவாக்கித் தந்திருக்கின்றன. அரசியல் சிந்தனைகள் பல்வேறு கோணங்களிலே இருந்தாலும், தமிழகத்துத் துயர் துடைக்க-தென்னகத்தின் அவலநிலை போக்க, அவை தம்முள் ஒன்றுபட்டே தீரும்.-இந்த உண்மையை, தமிழகம் மற்றுமொரு முறை கண்ணுரக் காண்கிறது, கடந்த 15-ம் நாள் முதல். முன்னர் தமிழகத்தின் சீவானந்தமும் சிவஞானமும், சின்னதுரையும் இராசனும், அந்தோனி பிள்ளையும் அண்ணாவும், பிறரும் தமிழகத்தின் எல்லை காக்க ஒன்றுபட்டனர். சீவானந்தம் அவர்கள் தடியடியும் ஏற்ருர், தாய்நில வளத்துக்காக. இப்படிப் பலவேறு சிந்தனைக் காரர்களையும் ஒன்ருக இணைத்து வைத்திருக்கிறது மறுமுறையும், உணவுப் பொருள்களின் விலை ஏற்றம்.

கடந்த இதழ் "எண்ண"த்தில் இந்நாட்டில் உலவும் இருவகைப் பிறவிகளின் தன்மைகளை வி..கதியிருந்தோம். நெல் விளைச்சலைப் பற்றி ஒன்றுமே தெரியாத சீமான்கள் கூட்டம், ஒன்று. மற்றது. நெல் எவ்வளவு விளைந்தாலும் கவலைப்படாத கூட்டம். இதில் மாநில அரசினர் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தோர் என்று சொல்வதே கடினமானதுதான். "ஒருபுறம் பார்க்கின் குதிரை; மறுபுறம் பார்க்கின் கழுதை!" என்று எவனோ எதற்கோ சொன்னானும். ஆனால் அது மாநில அரசுக்கும் பொருத்தமானதாகவே தோன்றுகிறது. பேரழகர் காமராசரும், பெருமழைப் பேச்சுவாணர் சுப்பிரமணியமும், கவிதைச் செல்வர் கக்கனும் (அண்மைக் காலங்களில் அவர் சொற்களால் விளையாடுவதால் இப்பெயர்) படியளக்கும் பக்தவத்சலனும், உணவு நிலைபற்றி ஊருக்கொரு பேச்சுப் பேசி வருகின்றனர். ஆனல் அவையெலாம், விலைகள் ஏறிவிட்டதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்திருப்பதாகவே காட்டுகின்றன. அன்றேல், மாநில அரசு 2 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்து, அவற்றை வழங்குவதன்மூலம் அரிசி விலையைக் குறைக்கப் போவதாகச் சொல்லியிராது. அத்தோடு, கடந்த சனவரியில் இவர்கள் பலவகை அரிசிக்கும் நெல்லுக்கும் விலை வரையறை செய்தனர். இவ்வரையறையை மீறுவோரை, இன்றியமையாப் பொருள்களுக்கென உள்ள சட்டப்படி தண்டிக்கப்போவதாகவும் பக்தவத்சலம் அவர்கள் சொல்லிருக்கமாட்டார்கள். ஆனல் இவற்றை அமைச்சர் அவர்கள் உரத்த குரலில் ஒலித்திருந்தும், அதிக விலைக்கே அரிசியும் நெல்லும் விற்கப்பெற்றன.

கடந்த செப்டம்பரில் உணவு அமைச்சர் அவர்களே அதிக விலைக்குப் பலவகை அரிசிகள் விற்கப்பட்டதை ஒப்புக்கொண்டு பேசியுள்ளார். இரண்டாவது வகை அரிசிக்கு மாநில அரசினர் வரையறுத்த விலை மணங்கொன்றுக்கு ரூ. 17. அரிசிச் சந்தைகளில் அதே அரிசி வெளிப்படையாக மணங்கு ஒன்று 19 ரூ. முதல் 23 ரூ. 90 காசு வரை விற்கப்பட்டிருக்கிறது. இது கட்டுப்பாடு செய்யப்பட்ட விலையைவிட நூற்றுக்கு நாற்பத்திரண்டு பங்கு கூடுதலான விலையாகும். இவ்வாறு அமைச்சர் அவர்களே கூறியதிலிருந்து, ஒரு குறிப்பிட்ட கூட்டம், தானே வலிந்தும் துணிந்தும் விலையை உயர்த்தி விற்றிருக்கிறது என்பதும், அக்கூட்டம் எதற்கும் அஞ்சவில்லை என்பதும் விளங்குகின்றன. அக்கூட்டத்தின்மீது அமைச்சர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எவை யெவை. மாநில அரசினரின் விதிப்படி ஒரு கவளம் சோறைப் பிடுங்குவனுக்கும் தண்டனையிருக்கிறது. ஆனல் பல பேருடைய சோறில் மண்ணைப் போட்ட இந்தக் கல்மனத்தார்க்கு என்ன தண்டனை தரப்பட்டது? மிகுந்ததும் பலவகைப்பட்டதுமான காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் அரசினர் செய்த செயல் என்ன? மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை? கேள்விக்கணை தொடுக்கும் பொது மக்களின்முன் விழிக்கிருர் அமைச்சர்! விழிக்கும் அமைச்சர் அந்த விலங்கு மனிதர்கள் பதுக்கி வைத்திருந்த பொருள்களை மீட்டியிருந்தால், பல்லாயிரம் குடும்பங்களும் பிழைத்திருக்கும்; பதுக்கல் ஒழிந்திருந்தால் விலையும் குறைந்திருக்கும்.

இவை எல்லாம் அரசினர் ஒரு முறையான-நிலையான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதையும், கண்துடைப்பு வேலைகளையே செய்ய முனைந்திருக்கின்றனர் என்பதையும் காட்டுகின்றன.

நிற்க, இனி அரசினர் இவ்வழிகளைக் கடைப்பிடித்தால் நலம் பிறக்கும் என்று கருதுகின்ருேம்.

நாடெங்கும், 500 குடும்பங்களுக்கு ஒரு நியாயவிலைக் கடையெனத் திறக்கவேண்டும். நியாய விலைக் கடையை, தம் கட்சியினருக்கோ வேறு வழிகளில் வேண்டியோர்க்கோ உதவும் கருவிகளாக ஆக்கிவிடக் கூடாது. உண்மையாகவே அவை ஏழைகளுக்கு உதவுவனவாகவே அமைய வேண்டும். பெரும் வருவாய் உள்ளோர் குடும்பத்துக்கும், உணவு விடுதி முதலியவற்றிற்கும் இவை கள்ள வழியில் பயன்படுவதாய் அமையக்கூடாது. நியாய விலைக் கடைகளில் நல்ல அரிசி விற்பதற்கும், ஒழுங்காக வழங்கப்படுவதற்கும் பொதுமக்களின் கண்காணிப்பு மிக அவசியமாகிறது. அரசினரே நியாய விலைக் கடைகளை நடத்துவதோடு, வறட்சியான சிற்றூர்ப் பகுதிகளிலும் இக்கடைகளைத் திறக்கவேண்டும். சிற்றூர்ப் பகுதிகளில் திறக்கப்படும் கடைகளில் மிகவும் உதவியான குறைந்த விலைகளில் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு முதலியவை கிடைப்பதற்கும் வழி செய்ய வேண்டும்.

இக்கடைகளில் வழங்குவதற்கான உணவுப் பொருட்களை அரசினரே நேரடியாகக் கொள்முதல் செய்யவேண்டும். பத்து ஏக்கரும் அதற்கு மேலும் நிலம் வைத்திருப்போரிடம் கட்டாயமாக அரசினர் நேரடியாக, தானியங்களைக் கொள்முதல் செய்து சேமித்து வைக்கவேண்டும். இதனுல் அரசினர் அடையும் இழப்புகளைத் தக்க மானியங்கள் தருவதன்மூலம் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மற்றும், ஏழை எளியவர்க்கு உணவுப் பொருள்கள் கிடைக்க என்னென்ன வழிகள் உண்டோ அத்தனை வழிகளையும் அலசி ஆராய்ந்து, நடுநிலை தவருது மேற்கொள்ள வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை அரசினர் ஏற்றுக்கொண்டால் தான் நல்ல வளத்தையும் அமைதியையும் காணமுடியும் இவற்றை வலியுறுத்துவதற்கே அனைத்துக் கட்சியினரும் ஒன்றுகூடி, கடந்த 15-ம் நாள் முதல் அமைதி ...ில் தம் குரலை ஒலிக்கின்றனர்; அறப்போர் உடற்றுகின்றனர். ...காண்டே போகும் விலைவாசியை ஒரு நிலைப்படுத்த - கொழுத்துக் ...யிருக்கும் பதுக்கல் பேர்வழிகளை உருக்குலைக்க, அரசினர் ஒரு ...ன முடிவைக் காணவேண்டும். அம்முடிவை எப்பாடு பட்டும் காத்துத் ...ண்டும்.-இவையே, இந்த ஒரு கிழமையும் நாடெங்கும் முழங்கிவரும் ...னந்தப்-இராமமூர்த்தி, அந்தோனி பிள்ளை-அப்பன்ராசு, சிவஞானம்-...புசாமி, ஆதித்தனுர், கிருட்டிணமூர்த்தி, அண்ணு - நெடுஞ்செழியன் - ...ன. வி. நடாாசன் ஆகியோர் வலியுறுத்தி வரும் கருத்துக்களாகும். இக்குரலை நாளைய நாளில் ஊர்வலங்கள் நடத்தியும் கண்டனக் கூட்டங்கள் கூட்டியும் இவ்விதழ் இறுதிப் பக்கத்தில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்றியும் வலிவாக முழக்கவிருக்கின்றனர். கழகத் தோழர்கள் அனைவரும் நம் துணைப் பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைப்படி கடமை காத்திருக்கின்றனர். மாவட்டச் செயலாளர்களும் பிறரும் அருந்தொண்டாற்றியிருக்கின்றனர்.

இவையெல்லாம் "தமிழகத்தார் ஆர்த்தெழுந்தால் - கைகோர்த்தெழுந்தால் வெற்றி உறுதி; உறுதி!" என்றே கூறுகின்றன. ★

"தென்றல்"

5-12-'59-ம் நாள் இதழில்

ப. புகழேந்தி எழுதும்

"பாதியில் நின்ற பாட்டு"

தொடர்கிறது.

மதி- தமிழ்ச் சொல்லே!

மறுபடியும், குழப்புகிறது ..கோல். ஆத்திரக்காரருக்குச் சொல் தடுமாறுகிறது. எண்ணிலரேனும் மதியுளாரை மாநிலம் வணங்கும்; எதுவுமிலாரை வைக்கோல் வணங்கும்!

சிறுவை ந. இனியன்

செல்வச் செருக்கால் - ஆட்சி தன் கையில் இருக்கிறது; தான் மன்னன் மகன் என்ற எண்ணத்தால் இறுமாந்து, தலை கணத்து. கண்மூள் பாதை தவறத் தன் தேரின் காலில் கன்றினைச் சிக்கவைத்துச் சட்டை செய்யாது சென்றுவிட்டான் ஒருவன், அன்று. இதைக் கேட்ட மன்னன் தன் செங்கோலைப் பற்றிக் கூறுங்கால் :

"எனது செங்கோலை,-அளவுகோலென்பேனே !-அஞ்சனக்கோலென்பேனே! எழுதுகோலென்பேனே! ஏற்றக்கோலென்பேனே! - கத்திரிக்கோ லென்பேனே! - கன்னக்கோலென்பேனே! - குருடன்கோலென்பேனே !-கொடுங்கோலென்பேனே! - துடைப்பக்கோலென்பேனே! - துலாக்கோ லென்பேனே! - மரக்கோலென்பேனே !- வைக்கோலென்பேனே! - அல்லது இன்று இறந்த பசுங்கன்றுகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோலென்பேனே !" என்று வருந்தியதாக இராமலிங்க அடிகள் கூறுகிறார். இன்று சில எழுதுகோல்கள் தன்னை மறந்து, வரலாறு மறந்து, தன் தாயின் சிறப்பையும் மறந்து தனது தாய் மாற்றான் மையலில் சிக்கியவள் தான் என்று கூசாது வரைந்து பிழைக்க நினைக்கின்றனர். இந்தப் போக்கு தமிழகத்தில்தான் நீடிக்க முடியும். தனது பேழையில் உள்ள மாணிக்கக் கற்களை மாற்றான்மடியில் வழங்கும் நிலையில் மொழியியல் விபீடணர்களும் தோன்றி இருக்கிறார்களே என்று வியப்படையாமல் வேறு என்ன செய்ய இயலும்?

சென்ற கட்டுரையிலேயே கூறினேன் மதி தூய தமிழ்ச்சொல் என்று. விளக்கத்தை மனத்தில் பதிக்கஇயலாதவர்கள் வம்புபேசிக் காலத்தை வீணுக்குவதில் பலன் இல்லை. மதி தேடி அலையவேண்டாம் என்று முன்பே கூறினேன். அவர்கட்கு மதி இன்னும் அகப்படவில்லை; மெத்தப் பரிதாபப்படுகிறேன். அம்மதியாளர்க்குத் தென்றல் வாடையாகக் காணப்படுகிறது. முரசக் கட்டிலில் படுத்தவர் தமிழ்ப் புலவராய் இருந்த காரணத்தால் மன்னன் வாளுக்குத் தப்பிய கதை வரலாறு. தென்றல் வரின் சாளரங்களை அகலத் திறந்து வைக்கும் முறையும், வாடை வரின் சாளரங்களை இறுக்கி மூடும் முறையும் வழக்கு. அஃதன்றித் தென்றலை வாடையென மதித்து, வாடையைத் தென்றலென மதித்து இயற்கை விதியை மாற்றினல், மாற்றுபவர் மருத்துவ மனையில் பல நாள் இருக்க நேரிடும். இது இயற்கை விதி; வாதமல்ல.

மதிக்கு இலக்கணம் வேண்டுவோர் சென்ற கட்டுரையில் 2-வது காலத்தில் 3-வது பாராவைப் பல முறை படித்து ஓர்தல் நலம். அது புரியாதார் புரியாதாரே.

மற்றும் நம் முன்னோர் ஒரு சொல்லினை உண்டாக்கினர் எனின் பொருள் பயக்காத சொற்களை... டாக்கவில்லை. ஒரு சொல் ... பயக்கவில்லையேல் அது சொல்... மாட்டாது. வெறும் எழுத்துக்க...

நிறைமதி நாளில் வரும் திருவிழா... களையே தமிழர் கொண்டாடினர். அத்திருநாட்கள்தான் பண்டுதொட்டு புலவர் பெருமக்களால் பேசப்பட்டு வருகின்றன. ஆனல் மதி முழுவதும் மறைந்து நிற்கும் நாளை அதாவது அமாவாசை நாளை தமிழர் தம் திருநாளாக அல்லது விழாவாகக் கொண்டாடினர்களில்லை. சைனர்கள் என்ற சமண சமயத்தவர்களின் 24-வது அடியாராக (தீர்த்தாங்கரராக)க் கொண்டாடப்பட்ட மாவீரர் என்பார் தெய்வத்தின் பெயராலும், சமயத்தின் பெயராலும், யாகத்தின் பெயராலும் நடைபெற்றுவந்த மூட நம்பிக்கைகளை ஒழித்தார். உயிர்க் கொலையும் ஊனுண்ணலும் ஒழிந்தன. மக்களுள் உயர்வு தாழ்வுகள் தலை காட்டவில்லை. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்புகள்பாரெங்கும் பரவின. அந்த மகாவீரர் தமது 72-வது வயதில் கி. மு. 527-ல் இயற்கை எய்தினர். அந்த அறிவுப் பேரொளி மறைந்த நாளைக் கொண்டாடினர். அவ்வறிஞர் கூறிய உண்மைகளை கடைப் பிடிக்கவும் பரப்பவும் சூளுரை கொண்ட நன்னளை, மதியே இல்லாத மந்தமதி கொண்டு தர்ப்பையையே செங்கோலாகக் கொண்டு சிலர் கன்னக்கோல் வைத்தனர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வழி காட்டிய நல்லறிஞனை, ஓர் அசுரன் என்றும், அவர் மறைந்த நாளில் ஊனும் மதுவும் உண்டு களிக்க போதித்த புல்லர் வழி நின்று, அம் மாவீரன் கொள்கைகள், உண்மைகள் பரவி இருந்த சிறந்த நிலப் பரப்பை திராவிடம் சிதைந்த நாள் என்றும் திருவிழாக் கொண்டாடுகின்றவர்கள் வரலாறும் உண்மையும் தெரியாதவர்களேயாவர். தொல்காப்பியர் காலத்து முன்னமேயே வேர்ச் சொற்கள் பல அழிந்து ஒழிந்த தன்மை அறியாதவரிடம், தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த "உச்சிமேல் புலவர் கொள்ளும் நச்சினர்க்கினியர்" உரைநெறி மதிநுட்பம் அறியாதவரிடம் வழக்கிட வேண்டிய நெறியல்ல; ஆயினும் அவர்தம் வாதத்தில் உள்ள பிழைகளையாவது சுட்ட விழைகிறேன்.

மதிதேடி அலையும் அப்புல்லர் வாதத்தில் முதல் வரிசையில் (1-வது காலத்தில்)

"ஸ்ரீஹி அஸ்ய :
அஸ்திதி-ஸ்ரீமதி" என்று குறிப்பிடுகிறார்.

அது

"ஸ்ரீ : அஸ்யா: அஸ்தீதி
ஸ்ரீமதி"

என்று இருக்க வேண்டும்.

மேற்கோளே தவருகக் காட்டுபவரிடம் பேச்சே இல்லை.

இரண்டாவது காலத்தில்

"வேழ முகவை நல்குமதி" இங்கே நல்குமதி என்ற சொல்லுக்கு நல்குவாயாக என்று பொருள் கூறுகிறார். இது ஓசை நிறைவின் பொருளறியாக் காரணமேயாம். ஆனல் இங்கு "வேழ முகவை நல்கு; அதுவே போதும்" என்பது தான் அங்குள்ள முதனிலை அசைச் சொல்லுக்குப் பொருள். அவருக்கு விளங்கவில்லை என்றல் விளங்காமலே இருக்கட்டும். அதற்காகப் பொருளை மாற்ற வேண்டாம்.

மலையாளத்தில் மதி என்றல் போதும் என்று பொருள் இருக்கிறது என்று விளக்கினேன். மலையாளப் பேராசிரியர்கள் மதி - திராவிட மொழிச் சொல் என்றே கூறுகின்றனர்....கோலார் 2-வது வரிசையில் "மதி" என்ற சொல் "ஸமதி" என்ற வட சொல்லின் திரிபு என்றும், ஸகரம் நீங்கி 'மதி'யாயிற்று என்றும் கூறுகிறார். இவருக்கு வட மொழியே தெரியாது போலும், "ஸமதி" என்று ஒரு சொல் வட மொழியில் கிடையவே கிடையாது. இது வடமொழிப் பேராசிரியர்கள் கூற்று.

...கோலின் துலாக்கோல் 3-வது காலத்தில்

"வ ப யோ ல பேதஹா" (கௌமாதி) என்பது. வகரமும் பகரமும் தம்முள் மயங்கும் என்ற மொழியிலக்கண உண்மைப்படி... என்கிறார். அவர் கூறும் மேற்கோள் 'வபயோ ர பேத:" (கௌமுதி) என்று இருக்க வேண்டும். ஆகவே இவர் மேற்கோள்கள் "எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்" என்றபடி சொல்லக் கேட்டவையே என்றும் உணர்ந்தவை அல்ல என்றும் பெறப்படுகின்றன.

மற்றபடி ஏனைய சொற்கள் மாசு படிந்தவை. மேலும் விடை கூறுது எம் மூலம் மறைமலை அடிகளார் நல்லுரை கேட்டுத் தெளிக. ★

"தென்றல்" 24-10-'59-ம் நாளிட்ட இதழில் திருமதி தமிழ்ச் சொல்லே என வாதிட்டிருந்தோம்; தக்க சான்றுகளுடன் நிலைநாட்டவும் செய்தோம். எனினும், உண்மையை மறைத்தே வயிறு கழுவும் "......கோலர்கள்" தமது ஏட்டின்மூலம் நம்மீது வசை பாடுகின்றனர். அம் முயற்சியில் அவர்கள் தாம் எழுதும் பொய்யையும் தடுமாற்றத்துடன் தப்புத் தவருக எழுதியுள்ளனர். அவற்றை விளக்கி மறுப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

—**ஆசிரியர்.**

ஆசிரியத் தோழருக்கு.

ஐயா,

தமிழில் பொருள் குறிப்பவைதாம் சொல் என்றும் அல்லாதவை சொல் அன்று எனவும் கூறினர்கள்.

அப்படிச் சொல்லிய சொல்தான் "மதி". பல பொருள்களுக்கும் பொருந்தும் தூய தமிழ் சொல்தான் இது. ஆனல் நம்மை, நமதியக்கத்தை எதிர்க்கின்ற-இல்லை; இல்லை-எதிர்ப்பதற்கென்றே இருக்கின்ற அரைத்"தமிழர்"கள் இருக்கிறர்களே, அவர்கள் தாய்த்தமிழையும் தாக்கும் தரங்கெட்ட செய்கைகளைப் புரிகின்றனர்.

சிலப்பதிகாரத்தை மட்டுமே, கட்டிப் பிடித்துக்கொண்டு கதறிப் புலம்பும் செல்வரின் சீடர்களே! வேண்டாம்; மதியை இழிக்கவேண்டாம்! உங்கள் மதியை இழக்கவேண்டாம். திரும்புங்கள் திருக்குறள் பக்கம்! குறள்வெண்பாவில் பாரீர் மதி என்ற சொல்லை:

மதி நுட்ப நூலோடு உடையார்க்கு- அதிநுட்பம்
யாஉள முன் நிற்பவை. (636)

பொதுநலத்தார் பல் நலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். (915)

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன். (1116)

அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து. (1117)

மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. (1118)

மலர் அன்ன கண்ணுள் முகம்ஒத்தி யாயின்
பலர் காணத் தோன்றல் மதி. (1119)

பதி மருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர் தரும் போழ்து. (1229)

மதி என்ற சொல்லை எதிர்ப்பதன் மூலம் வான்புகழ் கொண்ட வள்ளுவனை எதிர்க்கின்றீர். ஆம்! தாய்த்தமிழை எதிர்க்கின்றீர்!

பெ. மணிமாறன், சேலம்.

ஆலந்தின் தொழில் வளம்

...ஒரு சின்ன நாட்டில் எத்துணைத் தொழில் வளங்கள்...

ஆலந்தின் வரலாற்றில் எந்தக் கட்டத்தில் கைத்தொழிற் பண்டங்கள் பெருந் தொழில் உற்பத்திப் பொருள்களாக மாறின என்பதைக் கூறுவது கடினமாகும். அதேபோல, உள்ளூரைக் கடந்து விற்பனை செய்வதற்காகத் தயாரான பண்டங்கள் எந்தக் காலத்தில் நாட்டின் எல்லைகளைக் கடந்து சென்று ஏற்றுமதிப் பொருள்கள் என்ற நிலையை எப்படிப் பிடித்தன என்று கூறுவதும் கடினமாகும். நெதர்லாந்துக்கு வடக்கே பிரீசுலாந்தில் இருந்த மக்கள் பண்டமாற்று வாணிகத்தின் பொருட்டுக் கம்பளி யாடைகளையும் லினன் துணிகளையும் தயாரித்தார்கள் என்பதும், அவை எல்லை கடந்தும் விற்பனை போயின என்பதும், பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படும் ஏடுகளிலிருந்து தெரிய வருகின்றன. கி. பி. 1300-ல் பழைய நகரமாகிய டெலென்டர், புகழ்மிக்க தனது ரொட்டியை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்துவிட்டது; அந்த ரொட்டிகள் இன்றும் பேர் பெற்று விளங்குகின்றன. இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு மது வகைத் தயாரிப்பாளரும் தையல்காரர்களும் தமது தயாரிப்புக்களையும் கூட வெளி நாடுகளுக்கு அனுப்பத் தொடங்கினுர்கள். எனினும், ஐரோப்பாவில் தனித் தனியே நாடுகள் உருவான பிறகுதான் எல்லை என்பது அறுதியிட்டு இன்னது என்று தீர்மானிக்கப்பட்டது; ஆகவே இவற்றைத் தொழிலியல் உற்பத்தி என்று கூறலாமா என்பது கேள்விக்குரியது. 17-ம் நூற்ருண்டில் டச்சு நாடு இருந்த நிலைபற்றிச் சிறிது விரிவாக எடுத்துக் கூறலாம். ஐக்கிய மாகாணங்களின் குடியரசாக விளங்கிய நெதர்லாந்து அப்போதுதான் ஒரு நாடாக உருவாகிக் கொண்டிருந்தது. ஸ்பெயின் நாட்டு ஆப்சுபர்க் மன்னர்களுடன் நடந்து வந்த என்பதாண்டுப் போர் வெற்றியாய் முடிவுற்றபோது, வணிகம், சப்பல் போக்குவரத்து தொழில் வளர்ச்சி முதலியவை வளரத் தொடங்கின. அந்தக் காலத்தில் மேற்கு ஐரோப்பா இருந்த மாதிரியிலேயே உள் நாட்டுப்பகுதிகளில் உழவுக் காட்சியே மிகுந்திருந்த போதிலும், உண்மையான ஆலந்தாக விளங்கிய கடற்கரை மாகாணங்கள், ஆம்ஸ்டர்டாமைத் தலைநகராகக் கொண்டு வணிகம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றுக்கானதோர் உலக கேந்திரமாக வளர்ந்து வந்தன. சில காலத்துக்குப் பிற ஐரேப்பிய நாடுகளைச் சேர்ந்த கடற்படைகளின் மொத்த எண்ணிக்கையைவிட, டச்சுக் கடற்படை பெரிதாயிருந்தது. டச்சு நாட்டுக் கப்பல் கட்டுபவர்கள் மற்றவர்களைவிடத் திறமை மிகுந்தவர்களாயிருந்தார்கள். பாய்மரம், கயிறு, மரப்பலகை, நிலப்படங்கள் முதலியவை தயாரிக்கும் துணைத் தொழில்களோடு விரிந்து பரந்திருந்த இந்தக் கப்பல் கட்டும் தொழில், தொழில் நுணுக்கம், பண்டங்கள் பற்றிய அறிவு, பொதுஅறிவு முதலியவற்றில் ஒரு ஒழுங்கு முறையை நிறுவியது.

இந்த வணிகக்கப்பல்கள் பல்வேறு பண்டங்களை ஆலந்திலிருந்து கொண்டு சென்றன; அதேபோல வெளிநாடுகளிலிருந்து பல பொருள்களை ஆலந்தின் துறைமுகங்களில் கொண்டு சேர்த்தன. டச்சு மக்கள், சரக்கேற்றிச் செல்லும் கப்பல்காரர்களாக மட்டும் இல்லை; மிகச் சிறந்த அனைத்து நாடுகளிலும் உலவும் வணிகர்களாகவும் அவர்கள் விளங்கினுர்கள். சரக்குகள் எந்த இடத்தில் குறைந்த விலையில் கிடைக்கும் என்பதும், எங்கே அவற்றை மிகுந்த இலாபத்துடன் விற்க முடியும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆலந்தின் துறைமுகங்களில் அவர்கள் கொண்டுவந்து சேர்த்த பண்டங்கள் சீர்படுத்தப்பட்டன. துறைமுகங்களிலேயே மரங்களைத் துண்டு போட்டார்கள்; கம்பளி, ஆடையாக மாற்றப்பட்டது; புகையிலை, மூக்குப் பொடியாக உருமாறியது. ஆகவே சரக்கின் மதிப்பு மிகவும் கூடியது; சரக்கின் மதிப்பை உயர்த்தித் தரும் தொழிலியல் ஒன்று அங்கே உருவாகியது. மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னுல் இறக்குமதியான கச்சாப் பொருள்கள் ஓரளவு உருவு திரிந்தன; பாதி தயாரான பண்டங்கள் முழு உருவம் பெற்றன. தொழிற்சாலைக்குத் தேவையான ஆற்றலைத் தந்த காற்ருடிப் பொறியின்மூலமே இது முடிவதாயிற்று. அறுக்கவும், அரைக்கவும், உருட்டவும், நிமிர்த்தவும் அந்தப் பொறிகள் பயன்படுத்தப்பட்டன. படகுகள் செல்லக்கூடிய பெரிய கால்வாய்கள் நிரம்பியதும் ஆம்ஸ்டர்டாமுக்கு அருகில் உள்ளதுமான பரந்த சான் மாவட்டம், ஆலந்தின் முதலாவது தொழிற் பகுதியாக உருவாகியது. எண்ணிறந்த புகை போக்கிகளும், காற்ருடி யந்திரங்களும் அந்த இடத்தைத் தனியாக எடுத்துக் காட்டின. இத்தகைய தொழில் முன்னேற்றத்துக்குத் தேவையான தொழில் நுணுக்க யோசனைகளை ஓரளவுக்கு, வெளி நாடுகளிலிருந்து வந்த அகதிகள் வழங்கினுர்கள். ஆலந்தில் அவர்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது; ஆலந்தின் சுதந்திரச் சூழலில் அவர்கள் தமது ஆற்றலை முழு அளவுக்குப் பயன்படுத்தவும் புதிய உற்பத்தி முறைகளைப் புகுத்தவும் முடிந்தது. இறுதியாக, உலகெங்கணுமிருந்து அங்கே வந்து குவிந்த சாதனங்களும் கருவி முதலியனவும் டச்சுத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பை அளித்தன. பழங்கால முறையிலமைந்ததும் கவர்ச்சி மிகுந்ததும் ஆகிய டச்சுப் பீங்கான் தொழிலில், கீழை நாட்டு மண் பாண்டங்கள் பீங்கான்கள் ஆகியவற்றின் வரவால் ஏற்பட்ட நல்ல மாறுதலையே, இங்கு சான்ருகக் காட்டலாம்.

எனினும், ஆலந்தில் வணிகப் பெருக்கத்துக்கு அடிப்படையாயமைந்த தனிப்பட்ட சர்வதேச வணிகத்தால், டச்சுத் தொழில்கள்–குறிப்பாக ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்த நிறுவனங்கள்–வீழ்ச்சியுறுவதைத் தடுக்க முடியவில்லை. தீவிர தேசிய வாதம், அதன் விளைவாக ஏற்பட்ட வணிகப் போக்கு, வாணிகக் கட்டுப்பாடுகள், உள் நாட்டுத் தொழில்களுக்கு அளித்த பாதுகாப்பு ஆகியவற்றினுல் முதலில் பிரான்சும், பிறகு இங்கிலாந்தும், படிப்படியே மற்ற ஐரோப்பிய நாடுகளும் திணறின. ஆலந்துமட்டும் தனிப்பட்ட சர்வதேச வணிகத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தன. அதன் ஏற்றுமதி வர்த்தகம் சுருங்கியது. இறுதியாக, நெப்போலியன் டச்சு வர்த்தகத்தை நிலைகுலையச் செய்த போது ஏற்றுமதி என்பதே நசித்தே விட்டது.

அடுத்து 1870-ல், டச்சு மக்கள் தமது துறைமுகங்களை மேலும் ஆழமுள்ளவையாக்கி, கடற்படையையும் பலப்படுத்தினுர்கள். பல நூற்ருண்டுகளாகத் தாம் வணிகம் நடத்தி வந்த மலாயாத் தீவுடன் தொடர்பை மிகுதிப்படுத்தினுர்கள். இந்த வளர்ச்சி வேலைகளின் பயனுக, சாவாவிலிருந்து பலவகையான கச்சாப் பொருள்களும் ஓரளவு தயாரான பண்டங்களும் மிகுந்த அளவில் உலகெங்கும் பரவின. இவற்றில் பல, பதப்படுத்தப்படும் பொருட்டு ஆலந்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. எண்ணெய் வித்துக்கள், கொப்பரை, புகையிலை, கோக்கோ விதை, காப்பி, தேயிலை, வெப்ப நிலத்து மரவகைகள் முதலியவற்றுக்குரிய தொழிற்சாலைகள் பல அங்கே தோன்றத் தொடங்கின

மலாயாத் தீவுகளில் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகளுக்கென தொழில் நுட்பக் கருவிகள் உள்படப் பலவகைப் பொருள்கள் தேவைப்பட்டன. டச்சுத் தொழில் நிலையங்கள் இந்தத் தேவையை ஈடுசெய்யத் துவங்கின.

ஆலந்தில் உழவுப் பயிற்சியும், நீர்மட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சியும் பெருகியதை அடுத்து டச்சுக் குடியானவரின் வருவாயும் உயர்ந்தது. முன்பெல்லாம், விவசாயிகளில் பெரும்பாலோர் போரில் பங்கு கொள்ளச் சென்ருர்கள்: அல்லது வெள்ளத்துக்கு இரையானுர்கள்; அல்லது கவர்ச்சி மிகுந்த கப்பல்போக்குவரத்து, வணிகம் ஆகிய இவற்றில் ஈடுபட்டார்கள். இப்போது அந்த நிலை இல்லையாகையால், உழவர்கள் எண்ணிக்கையில் பெருகினுர்கள். ஆனுலும் டச்சு நாட்டின் தனிப்பட்ட வணிக முறை மிகவும் கடுமையானது. உழவர்கள், உள்நாட்டில் தம்மைக் காட்டிலும் வளம் மிகுந்த நிலமுடையவர்களோடும் ஆழ உழுது பயிரிட்டவர்களோடும் போட்டியிட வேண்டியிருந்தது. எனினும், அடுத்த நூற்ருண்டுத் துவக்கத்தில், ஆழ்ந்த பயிற்சி, நிபுணர்களின் அறிவுரை, விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகள், அவர்களுக்கே இயற்கையான ஒழுங்கு பற்றிய கட்டுப்பாடு முதலியவற்றினுல் உழவர்களுக்கே வெற்றி கிட்டியது. ஆலந்து நாட்டு மக்களின் தயாரிப்பு மிகவும் சிறந்த வகையாக இருப்பதால், எல்லைத் தடங்களையும் கடந்து விரிவாகப் பரவியிருக்கிறது. வளமற்ற வயல்களைப் பண்படுத்தி அதிலிருந்து கிடைத்த விளைச்சல், தோட்டப்பயிர், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கெனப் புதியதொரு ஏற்றுமதிவணிகம் உருக்கொண்டது. மிகச் சிறந்தவற்றையே ஏற்றுமதி செய்த இந்த வணிகம் விரைவில் விரிந்து பரந்து செழிக்கத் தொடங்கியது.

முதல் உலகப்போர் முடிந்து சமாதான ஒப்பந்தம் கையெழுத்தான பிறகுதான், இறக்குமதியாகும் தொழிற் கருவிகளையே பெரிதும் நம்பியிருப்பதன் விளைவை ஆலந்து உணர்ந்தது. நிலக்கரியைத் தோண்டும் வேலை வேகமாக நடைபெற்றது; உப்புக் காய்ச்சி அதை ஏற்றுமதி செய்யவும் தொடங்கினுர்கள். 1930 ம் ஆண்டுக்குப் பிறகு, மிகுந்த அளவில் எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

1930-க்குப் பிறகு ஏற்பட்ட நெருக்கடி, இந்தத் தொழில் மறுமலர்ச்சிக்குப் பேரிடியாக அமைந்தது. ஏறிக்கொண்டே போன வணிக வரியினுல் டச்சு ஏற்றுமதி தடைபட்டது. "கோட்டா" முறையால் ஏற்பட்ட தடங்கல்களும் அநேகம். ஆலந்து, தனது தனிப்பட்ட வணிகக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது; அதன் விளைவாக உள்நாட்டு வணிகம் பெருந்துன்பத்துக்குள்ளாகியது; வெளி வணிகம் கையை விட்டு நழுவியது. உள்நாட்டு வணிகம் மிகச் சிறிய அளவிலேயே அமைந்திருந்தது என்பதை, வேலையில்லாத் திண்டாட்டம் நன்கு எடுத்துக்காட்டியது. இந்த நெருக்கடியைக் கடந்தும் கடக்காமலும் இருக்கும்போது இரண்டாவது உலகபபோர் துவங்கியது. 1945-ல் ஆலந்து தொழில் வளத்தின் பெரும் பகுதி நாசமாயிற்று; சூறையாடவும் பட்டது. மேற்கு ஐரோப்பாவிலேயே மிக அதிகமான அளவில் நாசமுற்ற, இந்த நாடு நேச நாடுகளின் உதவியால் விரைவில் நிமிர்ந்து நிற்கலாயிற்று.

1951-ல் கொரியாவில் ஏற்பட்ட நெருக்கடியும், 1953-ல் பெருகிய வெள்ளமும் ஆலந்து மீண்டும் தலையெடுப்பதைத் தாமதிக்கச் செய்தன. இதனிடையே 1949-ல் பல நூற்ருண்டுகளாக ஆலந்துக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே இருந்து வந்த தொடர்பு அறுபட்டது. இதன் விளைவாக ஆலந்து நாட்டு உற்பத்தியின் ஏற்றுமதி சரிந்தது. இந்தோனேசியாதான் ஆலந்திலிருந்து மிகுதியான இறக்குமதி செய்த முக்கிய நாடு. இதுமட்டுமன்றி, வெப்பப் பரப்பு பற்றிய தமது அறிவு, தொழில் நுணுக்கம், வணிகப் பயிற்சியாகியவற்றை டச்சு மக்கள், தமது முன்னுள் தாய் நாட்டிலேயே பயன்படுத்த முடியாது போயிற்று. ஆயிரக்கணக்கான டச்சு மக்கள் இந்தோனேசியாவிலிருந்து ஆலந்து திரும்பி, வேலை தேடத் தொடங்கினுர்கள். இந்தோனேசியாவில் தமது வீடுகளை விட்டு வந்ததால், ஆலந்தில் பெரிய குடும்பங்களுடன் அவர்கள் இணைந்து வாழ வேண்டியதாயிற்று. வீடுகளில் இடம் போதாமல் நெருக்கியடித்து வசித்து வந்தார்கள். ஐரோப்பாவிலேயே மக்கள் நெருக்கம் மிகுந்த நாடாக ஆலந்து மாறியது. அந்த நாட்டின் மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு $1\frac{1}{2}$ சத வீதம் அதிகமாகப் பெருகி வருகிறது.

— 10-ம் பக்கம் —

பழம்பாடல் வரிகளை எடுத்தாள்வது தவரு?

தவறன்று எடுத்தாளல்; தகாததுமன்று. புலவர்களின் பாதை காட்டும் பாடம்: எடுத்தாளலால்- அழகும் அறிவும் சிறந்தன; எழிலும் பொருளும் விரிந்தன.

— முன் இதழ்த் தொடர்ச்சி —

5. காட்சி... அமைப்பு...

எடுத்தாளுதல் வகையின் முழு வரலாற்றையே ஆராய்ந்துகொண்டு வரும் நாம் சொல்லையும் சொற்களையும், அடியையும் அடிகளையும், முழுப் பாடல்களையும் கருத்துக்களையும் எவ்வெவ்வாறு எடுத்தாண்டுள்ளனர் என்பவற்றையெல்லாம் கண்டோம். இனிக் காட்சிகளின் அமைப்புக்களும், இலக்கிய அமைப்புக்களும் எடுத்தாளப்பட்டிருக்கும்வகைகளைக் காண்போம்.

சிலம்பிலே ஒரு காட்சி. மாதரியிடம் அடைக்கலம் புகுந்த பின்னர், மாதரியானவள் கண்ணகியையும் கோவலனையும் புதுமனை ஒன்றில் அமர்த்துகின்றாள். கண்ணகியும் கோவலனுக்குச் சமைத்து உணவு படைக்கிறாள். உண்ட கோவலனுக்குக் கண்ணகியின் தூய அன்பை விட்டகன்று சென்றிருந்த தன்மீது வெறுப்பும், குறையாத அன்பினளாய் நிற்கும் கண்ணகிபால் வியப்பும் மட்டற்ற அன்பும் தோன்ற, "நான் அழைத்ததும் உடனே என்னுடன் கிளம்பினாய்! எத்தகைய அரிய காரியத்தைச் செய்தாய் நீ" என்று கூறி வருந்துகின்றான். அப்போது கண்ணகி தன் நிலையைக் கூறுகையில் கூறுவது இது:

"அறவோருக்கும் துறவோருக்கும் அந்தண்மையுடையவர்க்கும், விருந்தாக வந்தவர்க்கும் விருந்து படைக்கும் பேற்றை நான் தங்கள் பிரிவால் இழந்துவிட்டிருந்தேன். அப்படி அந்த உயரிய பேற்றை இழந்து விட்டிருந்த என்னையும்..."

என்று கூறித் தொடர்கின்றாள். இந்தக் குறிப்பைச் சிலப்பதிகாரம்-16-கொலைக்களக் காதையின் 71-73 வரிகளாகக் காணலாம்.

"அறவோர்க்கு அளித்தலும்
அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்த என்னை"

கம்ப ராமாயணத்திலும் இதே போன்று விருந்தினர்க் குதவவில்லை என்பதற்காக வருந்தும் கட்டம் ஒன்று வருகின்றது. கோவலன் தன்னைப் பிரிந்திருந்ததைக் காட்டிலும் மனத்தை வருத்துவதாகக் கண்ணகி விருந்தைப் பேணுததை எண்ணுகின்றாள். இதேபோன்ற மன வருத்தத்தைக் கம்பனின் படைப்பிலும் நாம் காண்கிறோம். சிலம்பிலே காணும் காட்சிச் சிறப்பைப் போன்றதே கம்பன் காட்டும் காட்சிச் சிறப்பும். கம்பன் காட்டும் கலையழகை அன்பர்களே படித்துணர விட்டுவிடுகிறேன்.

இவ்வாறு 'காட்சி' அமைப்பதற்குச் சான்றாக மற்றோர் எடுத்துக் காட்டும் தருவேன்.

மன்னவன் குலோத்துங்கன் காலை நீராடிக் கவின் மிக்க அணிகள் பூண்டு சமய வழக்கப்படி நெற்றியிலே நீறு பூசி வெளி வருகின்றான். அவனின் பரந்த நெற்றியிலே வெள்ளிய திருநீற்றைப் பார்த்ததும் உலாவிலே வரும் பெண்களின் காமம் அளவு கடந்துவிடுகிறது. இதனைக் கவிஞர் ஒட்டக்கூத்தர் வெகு அழகாகப் பாடுகின்றார்.

அஞ்ஞானத்தையும தீயெண்ணத்தையும் அழிப்பதற்காக இடப்படுவது நீறு. ஆனால் இங்கோ இது காமத்தைத் தூண்டி, வெம்மையை அல்லவா உடலில் ஏற்றுகின்றது என்றெண்ணி அதன் செயலைக் குறிப்பிடுகின்றார். (குலோ. உலா-74,)

'செவ்வி நுதலிற்
றிருநீற்றுப் புண்டரம்
வவ்வி மகளிற் மனங்கவற்ற'

தீமையைப் போக்கித் தூய்மையை வளர்க்கும் நீறு குலோத்துங்கனின் நெற்றிமேல் ஏறியவுடன் தானும் அவனைப்போலவே பெண்களின் காமத்தைத் தூண்டுவதாக அல்லவா இருக்கின்றது என்பதே கருத்து

இந்தக் காட்சியைக் கற்பனைக் கடல் சிவப்பிரகாச அடிகளாரும் பிரபுலிங்க லீலையில் குறிக்கின்றார்.

மாயையும் காலை முழுக்கிட்டுக் கவின்மிக்க அணிபூண்டு கரைத்துக் குழைத்தது போன்று நெற்றிக்கு நீறிட்டு, நிமலனைக் காணப்புறப்படுகின்றாள். தெருவில் அவள் போகும்போது இளமை விருந்துண்ணத் தாவும் நெஞ்சங்கள் அவளையே ஆவலுடன் கண்ணால் பருகிக்கொண்டிருக்கின்றன. அந்த நெஞ்சங்களின் காதல் வேகத்தை- காமத்தீயை - மிகுதிப்படுத்துவதாக இருக்கின்றது மங்கை மாயையின் நெற்றி நீறு. மையலை மாற்றவேண்டிய நீறே, மையலை விளைத்து மனத் துயர் செய்கின்றது. காட்சியை மாயை பூசை கதியில் காணலாம்.

"மனத்துயர் செயும்மயல்
மாற்று நீறுதான்
அனிச்சமெல் அடியினர்
நுதல டுத்தலும்
பனித்துடல் வெதும்புமால்
படுத்தலான் என்பார்"

பாடல். 34.

இவ்வகையாகக் கருத்துக்களை மட்டுமல்ல; இலக்கியக் காட்சிகளை மட்டுமல்ல; காப்பிய அமைப்பையே கூட எடுத்தாளுவது உண்டென்பதற்குச் சான்று ஒன்று காண்போம்.

இலக்கிய அமைப்பைப் பற்றிப் பேசுமுன் பெருங் காப்பியங்களைப் பற்றி நாம் அறிதல் வேண்டும். சிலம்பிற்கும் மணிமேகலைக்கும் முன்னைய நீண்ட பெருங்காப்பியங்களை நாம் அடையவில்லை. எனவே நமக்குக் கிடைத்த காப்பியங்கள், சிலம்பையும் மேகலையும் தவிர்த்துப் பிறகு வந்த பிந்திய காப்பியங்களே. எனவே, காவிய அமைதியையும் இலக்கிய அமைப்பையும் நோக்க நாம் சிலம்பிற்கும் மேகலைக்கும் பின்னுலேயே தள்ளி வர வேண்டியவர்கள் ஆகின்றோம். இனிக் காண்போம்.

சிலப்பதிகாரம் ஓர் இசை நாடகம் என்பதால் மங்கல வாழ்த்துக்கடுத்து அது உடனே கதைக்கு - அதாவது நாடகக் காட்சிக்குச் சென்று விடுகின்றது.

இவ்வாறே மணிமேகலையும் பதிகத்தை அடுத்து விழாவறை காதை என்னும் முதல் காதையிலே காதையின் துவக்கத்தைக் கோடி காட்டி, இரண்டாம் காதையாகிய ஊரலருரைத்த காதையில் நேராகக் கதை நிகழ்ச்சிக்குச் சென்று விடுகின்றது.

சிலப்பதிகாரமோ, மணிமேகலையோ காணுத ஒரு புது நெறியைப் பின்வந்த ஓர் இலக்கியம் வகுத்துக் கொண்டது. அந்த இலக்கியம்தான் சீவகசிந்தாமணி என்னும் இலக்கியம்.

சீவகசிந்தாமணி சிலப்பதிகாரத்தைப் போலவோ, மணிமேகலையைப் போலவோ, பிற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களைப் போலவோ இல்லாமல் முற்றிலும் புதிய முறையில் அமைந்திருக்கின்றது. பெரிய வரலாற்றைச் சொல்லுமுன் சொல்லும் முன்னுரையையே இலக்கிய முறைக்கும் நடைக்கும் ஏற்ப, பெருங்காப்பியம் தன் துவக்கமாகப் பெற்றிருக்கும். இம்முறைக்கு மிகவும் சரியான எடுத்துக் காட்டாகத் திகழ்வது சீவக சிந்தாமணியே

பதிகத்திற்கு அடுத்து நாமகள் இலம்பகத்திலேயே கதை நிகழ்ச்சி துவங்கிவிடுகின்றது. என்றாலும், இலம்பகத்தில் முதலில் நாட்டு வளமும் பின்னர் நகர்வளமும் அதன் பின் கோயிற்சிறப்பும் அதற்கும் பின்னுல் சச்சந்தன் வரலாறும் முறையே குறிக்கப்படுகின்றன. சச்சந்தன் வரலாற்றிலேதான் காப்பியத்தின் கதைத் தொடக்கம் அமைகின்றது.

இத்தகைய முறை திருத்தக்க தேவராலேயே முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்டது. இவர்க்குப் பின் வந்த அனைவருமே இம்முறையைத் தான் கையாளத் தொடங்கினர். சூளாமணி இயற்றிய தோலாமொழித் தேவரும் இன்ன பிறரும் இவ்வகையினர்.

தோலாமொழித் தேவர் சிந்தாமணி ஆசிரியரைக் காட்டிலும் அழகுறப் பாடும் எண்ணத்தோடு தனித்தனிப் படலங்களாகவே ஆவற்றை ஆக்கினார். நாட்டுப்படலமும் நகரப் படலமும் என்று அமைத்துக் கொண்ட இந்த அமைப்பிலே முழுக்க முழுக்க அவையவையே இடம்பெற்றுள்ளன.

தோலாமொழித் தேவர் திருத்தக்க தேவரிடமிருந்து வழிபெற்றதைப் போல்; கம்பனும் தன் ஆரியக் கதைக்குத் தோலாமொழியாரிடமிருந்து வழிபெற்றான். சூளாமணியினின்றும் நேரடியான இரவலாக இருக்கக்கூடாதே என்பதற்காக ஆற்றுப்படலம் என்றொரு படலத்தை நாட்டுப் படலத்திற்கும் நகரப் படலத்திற்கும் இடையில் வைத்தான்.

ஆற்றுப் படலமென்று கம்பன் வைத்ததும் கூட-திருத்தக்க தேவரின் சிந்தாமணியில் நாட்டு வளத்திற்கு அடுத்து வரும் ஆற்று வெள்ள வருணனையை வைத்தும், அயோத்தியை அணைத்து ஆறு ஓடுதலைக் குறித்தும் என்றே சொல்லலாம். எப்படிக் கண்டாலும் ஆற்றுப்படலத்தை அமைத்ததே கம்பனின் கற்பனை வளத்தைக் காட்ட வாய்ப்புக் கிட்டவும், இலக்கியம்துவக்கத்திலேயே களைகட்டவும் காரணமாகத்தானே! வடமொழிக்கேற்ப எனினும், ஒக்கும். திருவவதாரப் படலத்திற் பபால்தான் கதை நிகழ்ச்சி துவங்குகின்றது.

எனவே காப்பியத்தின் அமைப்புங்கூடத்தான் எடுத்தாளப்பட்டு வந்திருக்கின்றது. என்பதையும், எடுத்தாளப்பட்டதனை அனைவருமே சேர்ந்து உயர்த்தினார்கள் என்பதையும், புதுமுறை காணும் முகம் உள்ளதற்குக் காரணம் இது என்பதையும் அறிகின்றோம்.

முடிவுரை :

கட்டுரையின் கடைசிப் பகுதிக்கு வந்திருக்கின்றோம். முடிக்குமுன் ஒரு சில கூறுவேன்.

எடுத்தாளப்படுவது தவறல்ல. அழகையும் அறிவையும் மிகுதிப் படுத்தவே எடுத்தாளுகின்றோம். இன்னும் சிறப்பாகக் கூறவேண்டுமென்றால் எடுத்தாளுவதனால் நயமுணரும் அறிவும், இசைத்துப் பாடும் ஆற்றலும் புலனாகின்றன.

எடுத்தாளுதலைத் தவறு என்று எண்ணுபவர்களுக்கு அண்மையில் காலஞ்சென்றவரும் மிகப் பெரும் புலவருமாகிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றிலிருந்து (உ. வே. சா. எழுதியது) ஒரு சில எடுத்துக்காட்டுவேன்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் கவித்திறனைப் பற்றிக் குறிப்பிடும் போது உ. வே. சா. இவ்வாறு குறிக்கின்றார்: (பக் : 278-279)

"சுவையற்ற பாடல்களை உண்டாக்கும் உலைக்கூடமாக இவர் மனம் இராமல், வளம்பெற்ற செய்யுட்களின் விளை நிலமாகவே இருந்தது." இது மட்டுமல்ல. "செய்யுள் இயற்றுவதென்பது இவருக்குத் தண்ணீர் பட்டபாடு."

புலவர் துரைமோகனன், வேலூர்.

செய்யுள் இயற்றுவது தண்ணீர் பட்டபாடென்றால் அதற்குச் சான்று என்ன? பிள்ளையவர்கள் எழுதியுள்ள நூல்கள் எத்தனை? பட்டியல் தருகிறேன்; படித்துப் பாருங்கள்.

தல புராணங்கள்-22. சரித்திரம்-3. மான்மியம் 1. பிறகாப்பியங்கள்-2. பதிகம்-4. பதிற்றுப்பத்தந்தாதி-6. திரிபந்தாதி 4. யமக அந்தாதி-3. வெண்பா அந்தாதி-1. மாலை-7. பிள்ளைத்தமிழ்-10. கலம்பகம்-2. கோவை-3. உலா-1. தூது-2. குறவஞ்சி-1. சிலேடை வெண்பா-1. வேறு சிலவற்றுள்:— கப்பற் பாட்டு. குரு பரம்பரை அகவல், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆனந்தக்களிப்பு, பொன்னூசல், மங்களம், லாலி, வாழ்த்து என வரும் இவ்வளவுதான் நமக்குத் தெரிவது இன்னும் நமக்குத் தெரியாமலும் கிடைக்காமலும் எவ்வளவோ இருக்கின்றன.

— 9-ம் பக்கம் —

மதுரை மாவட்டத்தில் அண்ணா

எழுத்தாளர் மன்றத்தின் எழில்மிக்க விழா! கல்லூரி மன்றங்களில் கருத்து மழை! கழகக் கூட்டங்களில் இலட்சியக் குரல்! அறிவுலகத் தலைவரின் அன்பழைப்பு!

அறிஞர் அண்ணா அவர்களின் மதுரை வருகையும் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளும் எண்ணி யெண்ணி மகிழத்தக்கவைகளாக இருக்கின்றன. ஓராண்டுக்கு மேற்பட்ட இடைவேளைக்குப்பின் அண்ணா அவர்கள் மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளில் கழகத்தின் இலட்சிய வளர்ச்சியினைக் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றுப் பெரிதும் மகிழ்ந்தார்கள். தன்னுடைய குரலுக்குக் காத்திருக்கும் தோழர்களின் ஆர்வத்தினையும் பொதுமக்களின் ஆசையினையும் கண்டு வியந்தார்கள்! கால்நூற்றாண்டுக் காலமாக அவர் வழிச்செல்லும் எழுத்தாளர் உலகத்தினையும், தமிழ்ப் பெரும்புலவர்களையும் பாராட்டினார்கள். இதற்குமுன் எப்போதும் அமைந்திடாத வகையில் ஐந்து நாட்கள் மதுரையிலே தங்கி, கழகத்தவரின் மகிழ்ச்சியைப் பெருக்கினார். மதுரை மாவட்டத்தின் தென்கோடியிலே யிருக்கும் 'கோம்பை' எனும் சிற்றூரிலே அண்ணாவின் சுற்றுப் பயணம் துவங்கியது, 7-11-59-ல். கோம்பை ஊராட்சி மன்றம் கழகத் தோழர்களின் பொறுப்பிலே இருந்தது. செயல்வீரர் கமால் அதன் தலைவராக இருந்தார்! பள்ளிப் பருவத்திலேயிருந்து கழகப்படை நடத்தும் நண்பர் விக்டர் மற்றும் பலர் அங்கே உறுப்பினர்கள், கமாலுக்கு உறுதுணையாக! கழக ஊராட்சி மன்றத்தினைக் காணப் பொறுக்காதவர்கள் அரசினரின் காலடியிலே வீழ்ந்து கலைத்துவிட்டார்கள்! கலைஞர் கருணாநிதியும் அறிஞர் அண்ணாவும் வரவேற்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது ஒரு காரணமாம்! அங்கேதான் அறிஞர் அண்ணா அவர்கள் மக்களாட்சிப் பண்புகளின் மாண்புகளை விளக்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அழகுச் சிறப்பு நிகழ்ச்சியாக மதுரை எழுத்தாளர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழா அமைந்தது. 8-11-59ஞாயிறன்றுமன்றத்தலைவர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் துவங்கின. தமிழ்ப் பெருமக்களின் காவலரும் நாவலருமான டாக்டர் ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்து வாழ்த்துக்களை வழங்கினார். எண்பதாண்டுகளை எய்திய பெரும்புலவர்- தள்ளாடும் நிலையிலே இருந்தாலும் குரலிலே தளர்ச்சியில்லை! அறிஞர் அண்ணாவும் விழாவிலே பேசுவது குறித்துப் பெரிதும் மகிழ்ந்தார். மன்றத்திற்கு வரும் வழியிலே "அண்ணாதுரை சிறந்த அறிஞர்; நல்ல பேச்சாளர்; அவருக்கு இணை அவரே" என்று பெருமைப்பட உரையாடிக் கொண்டே வந்தார்! நம் நாவலரும் அறிஞர் அண்ணாவும் மேடையிலே கை குவித்துக்கொண்ட காட்சி என்றும் என் உள்ளத்தை விட்டு நீங்க முடியாததாகும்! ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா அவர்களும் பாரதியார் அவர்களும்சேலம்கல்லூரிமேடையில் சொற்போர் நடத்திய காட்சிகளின் நினைவு என் உள்ளத்திலே எழுந்து ஓய்ந்தது! அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவைக் கேட்க, பாரதியார் பெரிதும் விரும்பினார். ஆனால் அவரின் உடல் நிலை நீண்ட நேரம் தங்க இயலாதபடியால் மன்றத்தவரிடம் விடை பெற்றுக்கொண்டார். டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் தன் தலைமையுரையில் தமிழகத்தின் மொழிச் சிறப்பினையும், மொழிப் பகைவர் செயல்களையும் விளக்கி மதுரை எழுத்தாளர் மன்றத்தின் செயல் முறைகளைத் தொகுத்துக் காட்டினார். அண்ணாவின் வரலாறு எழுதப் போகும் ஆசையினை வெளியிட்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மன்றத்தின் எழிலையெல்லாம் இழைத்துக் காட்டிய மக்கள் வெள்ளத்தினைக் கண்டு மகிழ்ந்தார். உள்ளமெல்லாம் கவிதையின் உணர்வாக - எண்ணமெல்லாம் தமிழின் சிறப்பாக, செயலெல்லாம் மன்றத்தின் வளர்ச்சியாக உருவாகிவிட்ட, செயலாளர் கவிஞர் ரவி அவர்கள் தன் அறிக்கையில் எழுத்தாளர் மன்றத்தின் கடந்த ஓராண்டுகாலப் பணியினைக் கூறி, உடனிருந்து ஒத்துழைத்த தலைவர்களுக்கும் செயற்குழுவினருக்கும் தன் நன்றியினை நவின்றார். துணைச் செயலாளர் பு. ரா. மதிவாணன் மன்றம் மாண்புற என்றும் தன் கருத்தை நன்றே ஈந்திடும் மன்றத் தலைவர் இராமமணிக்கனாரையும் பொங்கும் தமிழைப் பகைவர் கூடித் தடுத்திட வருங்கால் சொல்லால்— செயலால் அடித்தே அவரை ஓட்டிடும் நாவலப் பெரியாரான பாரதியாரையும், யாவரும் போற்றிடும் மாபெரும் புரட்சியைத் தமிழகந் தன்னில் தழைத்திடவைத்து அமிழ்தத் தமிழை அரசியல் சேர்த்து வழியிலே புதுமை காட்டிய மேதை, எழுஞாயிறின் ஒளிசேர் அறிஞர் அண்ணாவையும், கவியரங்கம் நடத்துவிக்க வந்திருந்த மறுமலர்ச்சிக் கவிஞர்களையும்மன்றத்தவரையும் வரவேற்றார். கவிஞர்கள் கதி. சுந்தரமும் நாவுக்கரசரும் அன்பினையும் அறத்தினையும் அழகு தமிழாலே பாடினர்! அருமைப் பனை. சண்முகமும் மொழி சிறந்த தேசிகனும் முயற்சியினையும் அது தரும் பயனையும் புது வண்ணங்காட்டும் கருத்துக்களில் மன்றத்திற்குத் தந்தார்! இரண்டாவது ஆண்டு விழாவினையும், தன் கவிதைத் தென்றலால், இலட்சிய வரலாற்றினைக் கலந்த உரிமைக் காவியத்தால், அழகுபடுத்தினார் கவிஞர் முடியரசன்! 'பொன்னி' வளர்த்த தமிழ்ச்செல்வன் -அன்றிலிருந்தே என் இதயம் கவர்ந்த முடியரசன், தனக்கே உரிய உரிமை வேட்கையினை-விடுதலை முரசினை- உள்ளந்திறந்து காட்டினார்; அறிஞர் அண்ணாவும் மகிழ்ந்தார்!

அறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் கண்ணதாசன் அவர்கள் 'கவியரங்கம்' அமைத்துக் காட்டுவதைக் காண மதுரை நகரத்துப் புலவரும் தமிழன்பரும் காத்திருந்தனர். அறிஞர் அண்ணா கேட்டார் 'கண்ணதாசன் வரவில்லையா' என்று. 'இல்லை' என்றோம்; "வேறு முக்கியமான ஏதாவது அவசர வேலையிருந்திருக்கும்" என்று அவரே ஆறுதல் கூறினார். அண்ணாவின் ஏமாற்றம் அவரது குரலிலே ஒலித்தது. பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் மதுரை எழுத்தாளர் மன்றத் துணைத் தலைவர்களிலே ஒருவர். அவர் தலைமையேற்கக் கவியரங்கம் நடைபெற்றது. ஒவ்வொரு கவிஞரின் சொல்லோவியங்களையும், வார்த்தைக்கு வார்த்தை அவர்கள் இழைத்துக் கொடுத்த கவிதைச் சுவையையும், தமிழ் இன்பத்தை மகிழ்ச்சிப் பெருக்கால் மன்றம் வரவேற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் கவிஞர்களையே உற்று நோக்கி, உள்ளத்தினைப் பறிகொடுத்தார். உளமாரப் பாராட்டினார்! எழுத்தாளர் மன்ற ஆண்டு விழாவினைச் சிறப்பிக்கும்பொருட்டு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, கதை, கையெழுத்து ஏடு ஆகிய போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்களுக்குப் பேராசிரியை திருமதி. தேவகிருபை தியாகராசன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். விழா மண்டபத்தின் எந்த மூலையும் விழியிலே தென்படவில்லை. அறிஞர் அண்ணாவின் அழகு தமிழ் அறிவுரை கேட்க அணி திரண்டு நின்றனர். நீண்ட இடைவேளைக்குப்பின் எழுத்தாளர்கள் மத்தியிலே பேசப்போகும் அண்ணா, இடைக் காலத்திலே சொல்லாத– சொல்ல முடியாமல் போன பல சுவையான செய்திகளைச் சொல்லப் போகிறார் என எண்ணினேன்; ஏமாறவில்லை நான்!

அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள்; சிங்காரத் தமிழாலே சிந்தையைக் கவர்ந்தார்கள்! ஒலியலைகளிலே மிதந்து வந்த அந்தப் பொன்மொழிகளைக் கேட்டுச் சுவைத்தவர்களுக்கு இன்றும் இதயத்திலே இன்பஞ் சுரக்கிறது. படித்து மகிழ விரும்புவோர்க்குச் சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்கிறேன்.

"மதுரை எழுத்தாளர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவிலே கலந்துகொண்டு, என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்கின்ற நல் வாய்ப்பினை அளித்த நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர்களின் ஆர்வத்தையும் முயற்சியையும் காணப் பெரிதும் மகிழ்கின்றேன் எழுத்தாளர்களின் எழுச்சியைப் பாராட்டுகிறேன். எழுத்தாளர்களிடம் இன்று நல்ல மாறுதல் காணப்படுகின்றது. இதற்குத் தமிழ் உணர்ச்சியும் பற்றும்தான் காரணம். எதிர்காலத்தை உருவாக்கித் தருவது எழுத்தாளர்களின் கடமையாகும். அவர்களுக்குத் துணிவு மிக வேண்டும். பொதுமக்களின் ஆதரவு அதிகம் கிடைத்தல்தான் எழுத்தாளர் எண்ணிக்கை பெருக முடியும். தற்போது சிறந்த தமிழ் நூல்கள் பல வெளிவருகின்றன. எழுத்தாளர்கள் நன்கு வாழ, அவர்களுக்குப் பொருள் வசதி வேண்டும். வெளிவரும் நூல்களை மக்கள் ஆயிரக்கணக்கில் வாங்கவேண்டும் ஒவ்வொருவரும் சிறிய அளவிலாவது தங்களது இல்லத்தில் படிப்பகம் வைத்திருக்க வேண்டும். நூல்களை வாங்கும் உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய தாய்மார்கள் ஒவ்வொரு திருவிழாவின் போதும் ஒவ்வொரு பாத்திரங்களை வாங்கி வீடுகளிலே அழகு பார்த்து அடுக்கிவைப்பதைப் போல வருவாய் குறைந்தவர்களும் கூட அதற்கேற்ப நூல்களை வாங்க வேண்டும்."

அறிஞர் அண்ணா அவர்கள் மறுமலர்ச்சி எழுத்துலகின் மாபெரும் தலைவர் என்பதை ஒவ்வொரு வார்த்தைகளும் ஒளியூட்டி வெளிக் காட்டின! அண்ணா தொடர்ந்தார்:

"என்னுடைய எழுத்தாள நண்பர் ஒருவர் இரண்டு திங்களுக்கு முன்னாலே ஒரு கடிதம் எழுதினார். அதில் தான் எழுதி அச்சிட்ட புத்தகத்தின் 800 படிகள் விற்பனையாகாமல் இருப்பதாகவும் அவைகளை விற்றுத்தரத் தக்க ஒரு விற்பனையாளரைத் தேடித் தரவேண்டுமாயும் கேட்டிருந்தார். அவருடைய எழுத்துக்கள் தரம் குறைந்தனவா என்றால், இல்லை. அவருடைய ஊரையும் பெயரையும் கூறாமல் விடுகிறேன். தமிழ் எழுத்தாளர்கள், தமிழுக்குச் சொந்தமானவர்கள். அவர்கள் தாழ்ந்தார்கள் என்ற செய்தி பரவாமலிருக்கவே அவற்றை வெளியிடவில்லை! ஒரே வகையான எண்ணங்களை வெளியிடும் எழுத்தாளர்கள்தான் இன்று நம் நாட்டில் உள்ளனர். குறிப்புகளை வெளியிடும் முறைகளை இன்னும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ் அரசர்கள், சிற்பிகள், நம்நாட்டு அரசியல் தலைவர்கள் ஆகியோரின் உண்மை வரலாறு நமக்குக்கிடைக்கவில்லை. நீதிக்கட்சித் தலைவர் டாக்டர் டி. எம். நாயர் அவர்களைப் போன்ற ஒரு சிறந்த அரசியல் தலைவரை நம் நன்கு அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் எங்கே பிறந்தார்-எப்போது பிறந்தார் - இடம் எது - எங்கே படித்தார்-எங்கெங்கே வாழ்ந்தார் என்பன போன்ற செய்திகள் எல்லாம் நமக்குத் தெரியவில்லை. காரணம் அவருடைய வரலாறு இல்லை!

கூடலரசன்

குறிப்புகளை எழுதிவைக்கும் பழக்கம் இல்லாததனாலே இதுபோன்ற வரலாறுகள் நம்மிடத்திலே இல்லை! அவர்களைப் பற்றித் தேவையான அளவுக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை."

அறிஞர் அண்ணா அவர்கள் டாக்டர் நாயர் அவர்களை நினைவூட்டியபோது மன்றம், ஆழ்ந்த மோனத்தில் இயற்கை பிறந்தது போல, அமைதியைக் காத்திருந்தது.

"வரலாறு இல்லையென்று வேதனைப்படும்போது நான் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியினைச் சொல்ல விரும்புகிறேன். சின்னாட்களுக்கு முன்னால் புத்தகக் கடை ஒன்றினில் பல புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தபோது ஒரே ஒரு புத்தகம் என் உள்ளத்தினைக் கவர்ந்தது.

— 8-ம் பக்கம் —

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

விலையைக் கேட்டேன்; பதினெட்டு ரூபாய் என்றார்கள். சிக்கனமாகவே இருக்க விரும்புபவன் நான், பெரியாரிடம் கற்ற பாடத்தினால்! இருந்தாலும் அந்தப் புத்தகத்திலே உள்ள செய்திகள், அதை வாங்குவதில் தவறில்லையென்றே கூறின. அந்தப் புத்தகத்தின் பெயர் "The day on Lincoln was shot" ("லிங்கன் சுடப்பட்ட நாள்") என்பதாகும். ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட நாள் காலையிலிருந்து அவனது நிகழ்ச்சிகள், அவன் அணிந்திருந்த ஆடைகள், சென்ற இடங்கள், சந்தித்த நபர்கள், சொன்ன செய்திகள், அத்தனையும் தொகுக்கப்பட்டுள்ளன. வேறு எந்தப் புத்தகத்தைப் படித்தாலும், எத்தனை புத்தகங்களைப் படித்தாலும் தெரிந்து கொள்ள முடியாத செய்திகள் இருந்ததால் அதனைப் பதினெட்டு ரூபாயென்ன-பத்து ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கூட வாங்கலாம்! அந்த ஆசிரியர் பத்து ஆண்டு காலத்திற்கு மேலாக லிங்கனுடைய உறவினர்களையும், அந்த நாட்களில் வாழ்ந்த உற்றார்களையும் உறவினர்களையும் தேடித்தேடிச் சந்தித்து எல்லா வகையான குறிப்புகளையும் சேகரித்துள்ளார்! அந்த எழுத்தாளன் பட்ட தொல்லையினை எண்ணினால் அந்தப் புத்தகத்தின் விலை ரூபா பதினெட்டு என்பது அதிகமல்ல! அந்த எழுத்தாளனுடைய உழைப்பும் முயற்சியும் ஆர்வமும் குறைத்து மதிப்பிடத்தக்கவை அல்ல; எண்ணியெண்ணி போற்றத்தக்கனவாகும்."

அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டிய சொற்களின் சுவை நிச்சயமாக இந்த எழுத்துக்களிலே இல்லை என்று உறுதியாகச் சொல்வேன். "லிங்கன் சுடப்பட்ட நாள்"–நம்மில் எத்தனையோ பேர் இன்று வரையிலும் கேள்விப்பட்டிராத பெயர். ஏனெனில் வேறு எவரும் எங்கும் எப்போதும் 'லிங்கன் சுடப்பட்ட நாள்' பற்றிய நெஞ்சு துடிக்கும் நிகழ்ச்சிகளின் கோர்வையைச் சொல்லவில்லையே! மீண்டும் அண்ணா பேசுகிறார்: "அதுபோலவே பண்டிதநேருவுக்குக் கருப்புக்கொடி காட்டிடும் நிகழ்ச்சியின்போது சென்னைச் சிறைச்சாலையின் புத்தகசாலையிலே ஒரு புத்தகத்தைக் கண்டேன். கையிலே தொடும்போது கிழிந்துபோகும் அளவுக்கு நைந்து போனபக்கங்கள் கொண்ட அந்தப் புத்தகத்தை எழுதியவரின்பெயர் என் நினைவிலே இல்லை. அந்தப் புத்தகம் இலண்டன் நகர வரலாறாகும். இலண்டன் நகரம் உருவான வகை, தெருக்களின் பெயர்கள். ஒவ்வொரு தெருவிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள், புகழ்பெற்ற அறிஞர்கள் வாழ்ந்த வீடுகள் அப்போது எப்படி இருந்தன–இப்போது எப்படி இருக்கின்றன, கவிஞர்கள் மில்டனும் செல்லியும் பொழுதுபோக்கிய பூங்காக்கள், அவைகளின் பெயர்கள், இப்படி எண்ணற்ற குறிப்புகள் நிறைந்த அந்தப் புத்தகம் என்னைப் பெரிதும் மகிழ்வித்தது. அதுபோன்ற ஏடுகளைப் படிப்பதும் அதற்காகச் செலவிடும் நேரமும் பொருளும் நாம் எளிதில் பெறமுடியாத செய்திகளுக்காகத் தரப்படுவனவாகும். அதுபோன்ற ஏடுகளின் எண்ணிக்கையை நம்முடைய எழுத்தாளர்கள் உருவாக்க வேண்டும்; வளர்க்கவேண்டும்."

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
[illegible]: சங்குப்பிள்ளை 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய சிறப்புச் சொற்பொழிவில் ஒரு சுவையான செய்தியை–வேறெங்கும் சொல்லாத செய்தியினைச் சொன்னார்கள். "நம்முடைய எழுத்தாளர்கள் அதிகமாகப் பயணக் கட்டுரைகள் எழுதவேண்டும். பயணக்கட்டுரைகள் எழுதுவதற்குப் பயணம் போய்வர வேண்டும். பயணம் போய் வருவதற்குப் பணம் வேண்டும். பணம் இல்லாததால் பயணம் போகமுடியவில்லை. பயணம் போகாததால் பயணக் கட்டுரைகள் எழுத முடியவில்லை. நம்முடைய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்குச் சென்னையிலே விழா நடத்தி 25 ஆயிரம் வெண்பொற்காசுகள் பணமுடிப்புத் தந்தபோது, நான் நம் கவிஞர் அவர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று மக்களின் பண்புகளையும் வாழ்க்கை முறைகளையும் நேரிலே கண்டு, நம்முடைய வாழ்க்கையுடனும் கலையுடனும் ஒப்பிட்டுக் கவிதைகள் இயற்றித் தரவேண்டும்!" என்று கேட்டுக்கொண்டேன். ஆனால் அவரோ அந்தப் பணத்திலே வேறு எங்கோ போகக்கூடாத இடத்திற்குப் பயணம் போய்விட்டார்"–அண்ணா அவர்கள் இதனைச் சொல்லி முடித்தபோது மன்றம் மகிழ்ச்சி ஆரவாரத்தால் துள்ளியெழுந்தது. நானும் சுவைத்தேன் சிறிதுநேரம். அடுத்த வினாடி 'குரல் கெட்ட குயிலின்' செயல் நினைவிற்கு வந்தது! அண்ணா அவர்கள் தன் சொல்லுக்குச் சொல் சுவையேற்றி அழகுதமிழ் காவியங்களின் சிறப்பினை விளக்கினார். கலையும் வாழ்வும் எழுத்தாளன் எண்ணத்திலே பிறந்து, இதயத்திலே வளர்ந்து, தமிழினத்தைக் காத்திடவேண்டும் என்ற தன் தணியாத ஆவலினைக் காட்டினார்! பேராசிரியர்கள் சொல்லலங்காரம் கேட்டு மகிழ்ந்தனர். நாஞ்சில் கி. மனோகரனும் அண்ணாவின் பலவண்ணங் கண்டு போற்றிக் களித்திட்டார்!

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய சொற்பொழிவின் இறுதிக் கட்டத்தில் 'மனம் புண்படும்படி' எழுதாதீர்கள் என்று எடுத்துக் காட்டுகின்ற 'பெரியமனிதர்களுக்கு' மிகச் சிறந்த சான்றுகளுடன் விளக்கம் தந்தார்! 'வேலைக்காரி' நாடகத்திலேயிருந்து ஒரு பகுதி, முன்னைய நேருவும் முன்னைய செளஎன்லாயும், இன்றைய நேருவும் இப்போதைய செளஎன்லாயும் – இவர்களும் கூட அண்ணாவின் விளக்கத்திற்கு உதாரணங்களாக வந்து நின்றார்கள்! புதிய எழுத்தாளர்களின் கடமைகளை நினைவூட்டி, அவர்களுக்குப் பொது மக்களின் ஆதரவினைக் கேட்டு, "பேராசிரியர்களே! நீங்கள் வழிகாட்டுங்கள். நாங்கள் பின்பற்றுகிறோம். காரியங்களைச் சாதித்துக் காட்டுகிறோம்" என்றும் தெரிவித்து விடை பெற்றுக்கொண்டார்கள்! எழுத்தாளர் மன்றச் சிறப்புச் சொற்பொழிவில் அண்ணா புதிய செய்திகளைத்தான் சொன்னார்! ஆனால் என் போன்றவர்களுக்குப் 'பழைய அண்ணா' தென்பட்டார்! ஆம்–அன்றைய பேச்சின் சொற்கணைகள் பத்தாண்டுகளுக்கு முன்னேயிருந்த அண்ணாவின் பாணியிலேயே அமைந்துவிட்டன! நாம் கண்ட "நாடும் ஏடும்" "நிலையும் நினைப்பும்" "தாழ்ந்த தமிழகம்" – இவைகளின் தொகுப்புக் காட்சியாக அண்ணா நின்றார். 8-11-59 அன்று மாலையில் மேலூர்தி. மு. கழகப்பொதுக்கூட்டத்திலே பேசிவிட்டு எதிர்பாராத வகையில் இரவு எட்டு மணிக்கு மதுரைப் பொதுக்கூட்ட நேரத்திலேயே வந்து சேர்ந்தார்! சந்தானம், செளந்திரராசன், சம்பு, முத்து, டாக்டர் அருணாசலம் பேசிய பிறகு அண்ணா துவக்கினார்! வழக்கத்திற்கு மாறாக $1\frac{1}{2}$ மணி நேரம் பேசினார். கழகத்தின் வளர்ச்சியும், கழகத் தோழர்களின் அவல நிலையும், அவரது கருத்துக்களிலே மிளிர்ந்தன! காகிதக் கப்பல் சுதந்திரா கட்சியில் பி. டி. ஆர். அவர்கள் ஏற முயற்சிப்பது சரியல்ல என்று நினைவூட்டினார்!

அறிஞர் அண்ணா அவர்கள் அடுத்தநாள் நிகழ்ச்சியாக, காலை 10 மணிக்கு மதுரை தியாகராசர் கல்லூரிப் பேரவையில் பேசினார். அவரை வரவேற்ற மாணவர்களின் ஆர்வத்தையும் அன்பினையும் எடைபோட்டுக் காட்டுவதும் எழுதுவதும் எளிதான காரியமல்ல! கல்லூரி முதல்வர் வரதாச்சாரியார், "அறிஞர் அண்ணா அவர்கள் உங்களுக்கெல்லாம் அண்ணாவாக இருந்தாலும் எனக்கு மட்டும் தம்பிதான். வயதில் அவரைவிட நான் பெரியவன்; அதனால்தான்; வேறொரு காரணத்தினாலும் அல்ல! அண்ணா அவர்களுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஏதோ 'சொக்குப்பொடி' போட்டுவிட்டீர்கள். அதனால்தான் மாணவர்கள் உங்கள் பேச்சைக் கேட்க இவ்வளவு ஆவலாக இருக்கிறார்கள். நாங்கள் வகுப்பில் எவ்வளவுதான் நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுத்தாலும் இவர்கள் கேட்பதேயில்லை! அந்தச் சொக்குப்பொடியின் மர்மத்தைக் கொஞ்சம் சொல்லிவிட்டுப் போங்க"–என்றார் கல்லூரி மண்டபத்தில் நிறைந்திருந்த அத்தனை பேர்களும் கல்லூரி முதல்வரின் இதயம் திறந்த பேச்சினைக் கைதட்டி வரவேற்கிறார்கள். மாணவர்கள் கைகளைத் தட்டினார்களா – மேசைகளைத் தட்டினார்களா என்பதை முடிவுசெய்ய முடியவில்லை. அதுவும் அவர்கள் குற்றமல்ல. வரதாச்சாரியார் அவர்களின் மழலைமொழி நிறைந்த பேச்சுதான் காரணம்! அண்ணா அவர்கள் மாணவர்களுக்கும் அரசியலுக்கும் இருக்கவேண்டிய தொடர்பினையும், மாணவர்களுக்கு அரசியல் அறிவு எந்த அளவில் தேவை என்பதனையும், கல்லூரிக் கல்வியின் பயனையும், விளக்கி ஒருமணி நேரம் பேசினார். பேராசிரியர்களும் அண்ணாவின் சொல்திறம் காட்டிய அறிவுத் திண்மையைக் கேட்டுக் களித்தார்கள்; பாராட்டினார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கன் கல்லூரி திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் உரை நிகழ்த்தினார்கள். முன்னுரை பேசிய நண்பர் இந்திரசித் "கல்லூரி மாணவர்கள், மன்றத் தேர்தலின்போது கேட்ட வாக்குறுதி அறிஞர் அண்ணா அவர்களைக் கல்லூரிக்கு அழைத்து வருகிறீர்களா என்பதேயாகும். எங்கள் வாக்குறுதி நிறைவேற உதவி செய்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று சொல்லி, அண்ணாவின் சிறப்பியல்புகளையும் விளக்கினார். "நீங்கள் கற்பது எதற்கு?" என்னும் பொருள் பற்றி அண்ணா விரிவுரை நிகழ்த்தினார்! கல்லூரி மாணவர்களுக்குக் கூட இடம் கிடைக்காத வகையில் கல்லூரிக்கு வெளியிலேயிருந்து அண்ணாவின் பேச்சினைக் கேட்கச் சென்றவர்கள் அமர்ந்துவிட்டார்கள். அந்த அளவுக்கு கல்லூரி மண்டபம் மேன்மேலும் வந்தோருக்கெல்லாம் இடம்தர இயலாமல் வருந்தியது! வெளியிலிருந்து செல்லும் பார்வையாளர்கள் கல்லூரி மாணவர்களுக்கு முதலிடமும் முதன்மையும் தர வேண்டியது கடமையாகும். மாலையில் அலங்காநல்லூரிலும், இரவு சோழவந்தானிலும் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரும்பணிகளையும் மாற்றார் தம் பழி மொழிகளையும் விளக்கிப் பேசினார்கள். 11-11-59 அன்று பெரியகுளம் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பகல் ஒரு மணிக்குச் சுட்டுப் பொசுக்கும் கடும் வெய்யிலில் கருத்துரைகள் தந்தார். காஞ்சிபுரம் நகர் நோக்கி அண்ணாவின் கார் புறப்பட்டது.

அறிஞர் அண்ணா மதுரையில் இருந்தார்! எழுத்தாளர் மன்றத்தில் எழில் மிக்க விழா! கல்லூரி மன்றங்களில் கருத்து மழை! கழகக் கூட்டங்களில் இலட்சியக் குரல்! இவைதாம் அந்தக் கிழமையின் கோலாகலம். ★

நக்கீரர் கழகம், சென்னை

பேராசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள் சுற்றுலாவும் கலை விழாவும்.

கல்வெட்டுக்களைக் கண்டு வருதற்கென்று நக்கீரர் கழகத்தார் ஒரு சுற்றுலா ஏற்பாடு செய்துள்ளனர். அது பற்றி முதன் முதலாகப் பொன்னேரி வட்டத்தில் உள்ள **"திருப்பாலைவனம்"**, **"பழவேற்காடு"** ஆகிய இரு இடங்களுக்கும் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் தலைமையில் சென்று வரத் தீர்மானித்து உள்ளது.

இந்தச் சுற்றுலாவில் கல்வெட்டுக்களைப் பார்வையிடுதலும், கலைவிழாவும், கவியரங்கும் நடைபெறும். ஆகவே இச் சுற்றுலா 1960 சனவரி 23, 24-ம் தேதிகளில் திருப்பாலைவனம் - பழவேற்காடு சென்று மீளும். சுற்றுலாவில் டாக்டர் அ. சிதம்பரநாதனார், பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டி. ஏ. வி. நாதன், டாக்டர் மு. ஆரோக்கியசாமி, பேராசிரியர் மயிலை. சிவ. முத்து, மயிலை. சீனி. வேங்கடசாமி, வல்லை. பாலசுப்பிரமணியம் பி. ஏ., திருமதி இந்திரா சோமசுந்தரம் பி. எஸ்சி., எம். ஏ., பி. டி., திருமதி புலவர் பங்கயச் செல்வி, எஸ். இராசலட்சுமி பி. ஏ. (ஆனர்சு) முதலிய புலவர் பெருமக்கள், கவிஞர்கள் புலவர் அரசு, அழ. வள்ளியப்பா, கோவை இளஞ்சேரன், அ. இளங்கோவன், நாரா நாச்சியப்பன், நாக. முத்தையா, சுரதா, தணிகை உலகநாதன் முதலிய கவிஞர்களும் கலந்துகொள்வர். பிற ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரிவான நிகழ்ச்சி பின்னர் வெளிவரும்.

விவரம்:

செயலாளர், **"தமிழகம்"**,
27, கொண்டலையர் தெரு,
பெத்துநாயக்கன் பேட்டை,
சென்னை-1.

நூல் நயம்

- செல்லையா -

★

பூங்கொடி

ஆசிரியர் : நா. சகந்நாதன் எம். ஏ.

நெடுங் கதைகள் எழுதுவது எளிதன்று. நிலைக்களனும், கருப்பொருளும், குணச் சித்திரங்களும், நிகழ்ச்சிக் கோவைகளும் கிடைத்துவிடலாம் எளிதில். ஆனால் அவற்றை வாழ்க்கையின் நடுப்புள்ளியைச் சுற்றி ஒட்டிக் காட்டி ஒரு நல்ல கதையைச் சொல்லுதல், திறனுடையார் இடத்தில் தான் வரும். எவ்வளவோ, "அம்மாமி" நாவல்களைப் பார்த்திருக்கிறோம். வெறும் நிகழ்ச்சிக் கோவைகளே அவற்றில் இடம் பெறுகின்றன. அந்நிகழ்ச்சிகளின் அடிப்படைகளும் விளைவுகளும் ஆராயப்படுவதில்லை. தவறான சமுதாயத்தைப் பெற்றெடுக்கும் சோம்பேறிக் கதைகள் அவை.

துடிப்பு, நடையிலும் எழுத்திலும் பொதிந்தெழுந்தால், தூய இலக்கியங்கள் பிறக்கின்றன. நாள்தோறும் ஆயிரம் "நாவல்"கள் வெளியாகின்றன. ஆனால் மனதில் பதிந்து, நினைவில் விளையாடுவனவோ ஓர் "அன்னை"—ஒரு "போரும் அமைதியும்" - ஒரு "துன்பக் கேணி" -ஒரு "குமரிக் கோட்டம்"-ஒரு "மேடம்பவாரி" எனச் சிலதான். ஏனென்றால் இவற்றில் வரும் பெண்கள் "வந்தோம்; போனோம்; அப்பள ஆராய்ச்சி நடத்தினோம்!" என்றிருப்போரில்லை. வாழ்க்கையின் துன்பங்களை வடித்துக் காட்டும் வரலாற்றுப் படைப்புகள்! சந்தைக் கடைப் பொருள்களைப்போல், விலங்கு மனிதர்களால் புரட்டியெடுக்கப்பட்ட உண்மை உருவங்கள் இவற்றில் வரும் மனிதர்கள்! அந்தந்தக் காலத்தின் முத்திரையைக் குத்திக்கொண்ட கருவூலங்கள்; கண்ணாடிகள்! தமிழகத்தில் அங்கும் இங்குமாக, சாகாதசரித்திரக் கதைகள் சில இருக்கத்தான் செய்கின்றன. அண்ணா தொடங்கி வைத்த முறையில் எழுந்த ஒளி மணிகள் பல. அவரது புதுமை வேகத்தின் பரம்பரையில் உருவான இலக்கிய மாடங்கள் பலப் பல. அந்த நல்ல சேதியைப் பறையறையும் நெடுங் கதைகளுள் ஒன்றுதான், பூங்கொடி!

தோழர் நா. சகந்நாதன் இளைய பரம்பரையில் எழுந்த இனிய ஒளிக்கற்றை. நடைமுறைப் பேச்சைக் கலந்த தனி ஒரு வழியை, தனது பேனாமூலம் தருபவர், அவர். "சீமாச்சு"வின் காதலையும், வேதாந்தத்தின் லீலைகளையும் படித்தறியாத - படிக்க விழையாத சமுதாயத்தின் பிரதிநிதி, இவரின் கதைத் தலைவன்.

அவன் தொண்டன்; தூயோன்; உழைப்பின் வடிவம்; இத்துணை நல்ல பாத்திரத்தினை அப்படியே படைத்துவிட்டார் தோழர் சகந்நாதன்.

பூங்கொடியும் அவனும் கட்டிய மனக்கோட்டைகள் இறுதியில் கற்கோட்டையாகவே அமைந்துவிட்டன. இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் நம் தோழர். அவர் நெய்த இந்நூலின் பின் பகுதியில் சில "நிரடுகள்" உள்ளன. வரும் பதிப்பில் அவை நீக்கப்படின், கதையின் ஓட்டத்தில் இடைத் தங்கலோ, தடையோ இரா.

மொத்தத்தில்......வரண்ட தலைகளின் வாழ்வை வைத்து ஒரு பசுஞ்சோலையை வளர்த்திருக்கிறார். அதில் காணும் மலர்கள் கண்ணுக்கினியன; படித்தற்குரியன.

விலை ரூ. 2-00.

கிடைக்குமிடம்:

மலர் நிலையம், சென்னை.

★

கவிதைக்குமரி

ஆசிரியர் : சே. கனகசபை பீ. ஏ.

சின்னச்சின்னச் சொற்களில் அழகுக் கருத்துக்களை வடித்துக் காட்டுதல், ஒரு தனித்திறமைதான். இந்த வழியில் நல்ல முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார், கண்டவராயன்பட்டிக் கனகசபை அவர்கள். அவர் கவிப்பெண்ணை "வா! வா!" என்றழைத்து அணைக்கத் துடித்த கதையிலிருந்து, வள்ளுவர் கருத்தைச் சுவைத்த கதைவரை சொல்லி முடிக்கிறார்.

சலவைத் தொழிலாளியைக் குறித்துப் பாடியுள்ள பாடலில் அவலமும் நகையும் குமிழிடுகின்றன. ஓடையின் ஒலியை, கன்னியின் கைவளையலொலிக்கு ஒப்பிடுகிறார்; நன்று.

சுவையான சில பாடல்கள் அடங்கிய இக்கவிதைத் தொகுதியில், சில இடங்களில் சீர் பிரிப்பதில் கவனம் செலுத்தியிருந்தால் மேலும் அழகுமிளிரும். காட்டாக, 29-ம் பக்கத்தில் உள்ள ஐந்தாம் வரியை, "ஆலைச்சங்(கு) ஊதி நேரம்" என்று போட்டிருந்தால் பொருளும் சிதைந்துவிடாது; இலக்கணமும் கெட்டுவிடாது.

மொத்தத்தில் கனகசபையின் தமிழ் நலமறிய, "கவிதைக் குமரி"யைப் படிக்கலாம்.

விலை ரூ. 1.

விற்பனை உரிமை :

செல்வி பதிப்பகம்,
காரைக்குடி.

★

தஞ்சை மாணவர் கழகக்கவிதை வெளியீடு.

தஞ்சை மாணவர் கழகத்தார் கடந்த நான்கு ஆண்டுகளாக, மாணவர்களிடை தமிழார்வத்தை வளர்ப்பதற்காகப் பல போட்டிகளை நடத்தியிருக்கின்றனர். நான்காமாண்டுக் கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்ற கவிதைகளை ஈண்டு தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர். நல்ல முயற்சி.

வேண்டுவோர் 8 காசு அஞ்சல் தலைகள் அனுப்பிப் பெறுக.

முகவரி

மாணவர் கழகம்,
கண்சர்கோட்டை சந்து,
தஞ்சாவூர்.

—6-ம் பக்கத் தொடர்ச்சி—

இப்போது புரியலாம் இவருக்குச் "செய்யுள் இயற்றுவது என்பது தண்ணீர் பட்ட பாடு"தான் என்பது.

இவ்வளவு நூல்களையும் எழுதிக் குவித்த மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப்பற்றியும் இந்தப் படைப்புக்களையும்பற்றியும் உ.வே. சாமிநாத ஐயர் குறிப்பது இது: (பக்: 279.)

"இவருடைய புலமைக் கடலிலிருந்து ஊற்றெடுத்த சிறிய ஊற்றுக்கள் என்றே அவற்றைச் சொல்ல வேண்டும். அக்கடல் முழுதும் மடை திறந்திருந்தால் தமிழ்நாடு முழுவதும் இவருடைய பல திறப்பட்ட கவி வெள்ளத்தில் முழுகி இன்புற்றிருக்கும்."

கணக்கற்ற புராணங்களையும், பிரபந்தங்களையும், பிற நூல்களையும் அனைவரும் வியக்கும் வண்ணம் எழுதிக் குவித்த மகா வித்துவான் பிள்ளையவர்களைப்பற்றி ஐயர் இவ்விதம் குறைபட்டுக்கொள்கின்றார் என்றால், மகா வித்துவான் அவர்களின் புலமை ஆழத்தை என்னென்பது? இப்படிப்பட்ட புலமை ஆழம் கொண்ட மகா வித்துவான் அவர்கள் மற்ற எல்லாப் புலவர்களும் செய்யும் வேலையையும் செய்தாரா? இதற்கு விடையையும் உ. வே. சா அவர்களே தருகின்றார்.

"எந்த நூலிலேனும் ஒரு புதுக் கருத்தை அறிந்தாராயின் அதனைப் பின்னும் அழகுபடுத்தித் தாம் இயற்றும் நூலில் பொருத்திவிடுவார். தாம் கண்டும் கேட்டும் அனுபவித்தவற்றைச் செய்யுட்களில் ஆங்காங்கே அமைத்துப் பாடுவார்"

—ஐயரவர்கள் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டவர்; அவருடைய மாணவர், எனவே ஐயரவர்கள் சொல்வதை நிச்சயமாக நம்ப இடமுண்டு. பிள்ளையவர்களின் வரலாற்றில் பக்கம் 282-ல் மேற்கண்ட செய்தியைக் காணலாம்.

இவ்வளவு பெரும் புலவரே இவ்வாறு செய்திருக்கின்றார்.

இவ்வளவு நூல்களா? என்று நாம் மலைக்கும்போது பிள்ளையவர்களின் புலமைக் கடலிலிருந்துஊற்றெடுத்த **சிறிய ஊற்றுக்கள்** இவை என்று சர்வ சாதாரணமாகக் குறிக்கின்றார் உ. வே. சா.. அந்த அளவிற்கு ஆற்றலும் புலமை ஆழமும் கொண்ட இப்படிப்பட்ட பெரும் புலவர் தம்மால் பாடமுடியாது என்பதாலா இப்படிச் செய்தார்? இல்லை. நிச்சயமாக இல்லை. பிறருடைய கவித் திறனைப் போற்றும் பண்பு தம்மிடம் உண்டு என்பதைக் காட்டவும், தம்மினும் மேம்பட்ட புலவர்கள் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டவும், பெரும் பெரும் கவி மன்னர்களோடு தம் கவிதை ஒத்த தகுதி படைத்ததாக இருப்பதை (எடுத்துச் சொல்லாமல்) காட்டவும் தான் எடுத்தாண்டார். தம்மைக் காட்டிலும் நயமுணரும் ஆற்றலும், புலமைத் திறனும் படைத்தவர்களைப் பிள்ளையவர்களே புகழ்ந்திருக்கின்றார்கள் என்றும், அவர்களை அளவுகடந்த மதிப்புடனே போற்றி வந்தார்கள் என்றும், நாம் அறிகின்றோம். எனவே இத்தகையவர் அவர்கள் பாலுள்ள தம் மதிப்பையும் பணியையும் தெரிவிப்பதற்காகவும் அழகு கருதியும் எழுதியிருக்கின்றார்கள் என்பது தெளிவாகும். அடிகளையும் பாடல்களையும் இவர் எடுத்தாண்ட இடங்கள் பல என்பதையும் அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் அறிய விரும்பும் அன்பர்கள் பிள்ளையவர்களின் படைப்புக்களைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

> **வருந்துகிறோம்.**
>
> மதுரை தி. மு. க. ஊழியர் தோழர் அரங்கன் அவர்களின் அன்னையார் காலமானமை அறிந்து, வருந்துகிறோம்.
>
> —ஆசிரியர்.

அடிகளையும் பாடல்களையும் கருத்துக்களையும் எடுத்தாளுவது மட்டுமல்ல; மற்றொன்றையும் இவர் பின்பற்றியிருக்கின்றார்.

முன்பே நாம் கம்பன், தன் இலக்கிய அமைப்பை எப்படி அமைத்துக்கொண்டான் என்பதையும், அவனுக்கு அவ்வகையில் உதவியவர்கள் யார் என்பதையும் அறிந்துகொண்டிருக்கின்றோம். இவ்வகையில் பிள்ளையவர்களும்ஏதேனும் வழி மேற்கொண்டிருக்கின்றார்களா என்றால் ஆமென்னும் விடை கிடைக்கத்தான் செய்கிறது.

பக் : 278-ல் உ. வே. சா. அவர்கள் குறிப்பதன்மூலம் பிள்ளையவர்கள் தமக்குமுன் வாழ்ந்த கச்சியப்ப முனிவரின் இலக்கிய அமைப்பையே பெரிதும் பின்பற்றியிருக்கின்றார்கள் என்று அறிய முடிகிறது. வாசகத்தை அப்படியே தருவேன்.

"கச்சியப்ப முனிவர் நூல்களில் உள்ள அரிய அமைப்புக்களையும், சங்க நூற் பிரயோகங்களையும் பற்றி இவர் அதிகமாகப் புகழ்வார். அவருடைய நூலமைப்பையே இவர் பெரும்பாலும் பின்பற்றிப் பாடுவார்."

இதுபோதும் என்று நினைக்கின்றேன்.

எனவே மாபெரும் புலவராகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் கம்பனும் பிறரும் இலக்கிய அமைப்பைத் தம் முன்னோரிடத்திலே இருந்து எடுத்தாண்டு கொண்டதைப் போலவே ஆண்டிருக்கின்றார்கள் என்பதும் பிறவும் தெளிவாகின்றன. புலமைக்கடல் பிள்ளையவர்களுக்கே இந்த நெறி வந்துள்ளது என்றால், பிறரைப் பற்றி நாம் என்னத்தைச் சொல்ல?

எனவே இறுதியாக, கருத்தையோ பாடல்களையோ பாடல் அடிகளையோ இலக்கிய அமைப்புக்களையோ காட்சி அமைப்புக்களையோ எடுத்தாளுவது தவறு அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்தி; தவறு தவறு என்று கதறுபவர்கள் தம் கதறலை நிறுத்திக் கொண்டு தெளிவு பெறுவார்களாக என்று சொல்லி; எடுத்தாளுவது தவறல்ல தவறல்ல என்று மீண்டும் மீண்டும் கூறி இந்தக் கட்டுரையை முடிக்கின்றேன்.

(முற்றுப்பெறுகிறது)

★

[தோழர் துரைமோகனன் அவர்களின் இச்சீரிய முயற்சியைப் பாராட்டியும், தெளிவு தந்தமைக்கு நன்றி கூறியும் எழுதியுள்ள அன்பர்களுக்கு நம் நன்றி. புலவர் துரைமோகனனுக்கும் நம் வாழ்த்துக்கள்.

—ஆசிரியர்.]

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

மக்கள் வெளி நாடுகளுக்குச் சென்று வாழ ஊக்கமளித்து வந்த போதிலும் ஒவ்வொராண்டிலும் புதிதாகச் சுமார் 50 ஆயிரம் பேருக்கு வேலையளிக்க வேண்டியிருக்கிறது. தொழிற்சாலைகளில்தான் அவர்களுக்கு வேலையளிக்க வாய்ப்புண்டு. ஆகவே, இருக்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதும், புதிதாகப் பல தொழில் நிலையங்களை ஏற்படுத்துவதும் தொடர்ந்து விரைவாக, இடையீடின்றி நடைபெற வேண்டியிருக்கிறது.

பொதுவாக, ஆலந்தில், கச்சாப் பொருள்கள் மிகக் குறைவு. எனினும், அந்த நாடு அமைந்துள்ள வகையிலிருந்து அந்தத் துறைமுகங்களில் பல்வேறு கச்சாப் பொருள்கள் வந்து குவிகின்றன.

ஆலந்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களின்மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு, கச்சாப் பொருள்களை இறக்குமதி செய்கிருர்கள். இதனுல், வணிகத் துறையைப் பெருக்குவதில் ஈடற்ற ஒரு நாடாக அது திகழ்கிறது.

சான்ருக, ஆலந்து, இரும்புக் கனிசத்தையும் தகரக் கனிசத்தையும் இறக்குமதி செய்கிறது. தேனிரும்பும் தகரமும் ஏற்றுமதி செய்வதில் முதலிடம்பெற்றுள்ள நாடுகளில் ஆலந்து ஒன்ருகும்.

கச்சா பாசு பேட்டை வாங்கும் ஆலந்து, பாசுபேட் கலந்த உரத்தை ஏற்றுமதி செய்வதில் (அமெரிக்காவைத் தவிர) உலகிலேயே முதலாவதாக நிற்கிறது.

மரம் இறக்குமதி செய்யப்படுகிறது. மரச் சாமான்களும், காகிதங்களும், ரேயானும் ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகள் பல அங்கேயிருக்கின்றன.

தனக்குத் தேவையான மொத்தப் பருத்தியையும், தேவையான கம்பளியில் 95 சத விகிதத்தையும் ஆலந்து இறக்குமதி செய்கிறது. என்றுலும், உலகெங்கும் துணித் தயாரிப்புக்களை அனுப்பும் துணியாலைகள் பல அந்த நாட்டில் உண்டு.

செம்பு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனுலும் ஏற்றுமதியாகும் மின்சாரக் கருவிகளின் அளவு, உள் நாட்டில் பயன்படுத்தப்படுவதைக் காட்டிலும் அதிகமாகும்.

தோல், ரப்பர் முதலியவற்றை இறக்குமதி செய்யும் ஆலந்து நாடு, அவற்றைப் பதனிட்ட தோல்களாகவும், மிதியடி, மோட்டார் டயர், சைக்கிள் டயர் முதலிய வடிவங்களிலும் ஏற்றுமதி செய்கிறது.

கச்சா எண்ணெயை இறக்குமதி செய்தாலும்கூட, ஐரோப்பாவிலேயே சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய்ப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில், அது முன்னணியில் நிற்கிறது.

எண்ணெய் வித்துக்கள், பழங்கள் முதலியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. தாவர எண்ணெய், கொழுப்பு, மார்கரினி, கொக்கோத் தூள், சாக்லெட், சிகரெட், சுருட்டு முதலியவையாக உருமாறி அவை வெளிநாடுகளுக்குச் செல்கின்றன. ஆலந்து, 'கச்சா' வைரங்களை இறக்குமதி செய்து, அவற்றை அறுத்து, மெருகிட்டு ஏற்றுமதி செய்கிறது.

அதேபோல உள் நாட்டின் கனிசங்களும், பண்ணைப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னுல் பண்படுத்தப்படுகின்றன.

டச்சு நிலக்கரித் தொழிலில் ஒரு பகுதி, நிலக்கரியைக் 'கோக்' கரியாக்குவதில் ஈடுபட்டிருக்கிறது. அந்தக் கரியில் பாசுபரசும் கந்தகமும் குறைந்த அளவில் இருப்பதால், உலகெங்கிலும் அதற்குக் கிராக்கி உண்டு. 'கோக்' கரியிலிருந்து கிடைக்கும் வாயுவை, நைட்ரசன் கலந்த உர உற்பத்தியிலும், இரசாயனப் பொருள்களின் உற்பத்தியிலும் பயன்படுத்துகிருர்கள்.

பெட்ரோல், உப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள இரசாயனப் பொருள் தொழிற்சாலை தனது உற்பத்தித் திட்டத்தில் வேறு பல புதிய பண்டங்களைச் சேர்த்து வருகிறது. சோடா உற்பத்திசாலை ஒன்று விரைவில் துவங்கப்படவிருக்கிறது.

டச்சு நாட்டில் தானியம் முதலியவற்றைத் தொழிற்சாலைகளில் பதப்படுத்துகிருர்கள். அவற்றில் பெரும்பாலானவை உழவர்களுக்கு உரியவை. உலகிலேயே மிக அதிகமான அளவில் உருளை மாவையும் 'கார்ட் போர்ட்' பலகைகளையும் ஏற்றுமதி செய்வது ஆலந்து நாடேயாகும். 'பீர்' ஏற்றுமதியில் அது இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆலந்தில் விளைந்த பீட் கிழங்கிலிருந்து தயாரித்த சர்க்கரை ஏற்றுமதியும் கணிசமானதேயாகும். நேரடியாகச் சர்க்கரையாக இல்லாமல், டப்பாக்களில் அடைத்த பால், சாக்லேட், சாம் என்ற வடிவில் ஏற்றுமதியாவதும் ஏராளம். மதுவகைகளைத் தயாரிக்கும் நிலையங்களும், கச்சாப் பொருள் வர்த்தகத்துக்குப் பெரிதும் உதவுகின்றன.

உள் நாட்டிலேயே விளைந்த பழங்களைக் கொண்டு சாம், ஊறுகாய் போன்ற வடிவில் உலகின் பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்கிருர்கள்.

ஆலந்தின் பாற்பண்ணைகளிலிருந்து பாற் பண்டங்கள் பெருமளவில் ஏற்றுமதியாகின்றன. பால் டப்பாக்களை ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே முதலிடமும், பால் டப்பாக்களை ஏற்றுமதி செய்வதில் இரண்டாவதிடமும், பால் பவுடர் ஏற்றுமதியில் முதலிடமும் பெற்று, ஆலந்து, பல்லாண்டுகளாக திகழ்ந்து வருகிறது.

கச்சாப் பொருள்களை இறக்குமதி செய்து, அவற்றை ஓரளவு பண்படுத்தி ஏற்றுமதி செய்வதும் நடைபெற்று வருகிறது. அவற்றுள் பல உள் நாட்டிலேயே பயன்படுத்தப்படுவதும் உண்டு. அச்சுத் தொழிலிலும், அதனேடு தொடர்புடைய பிறவற்றிலும், டச்சுக் காகிதம் முக்கிய பங்கு வகிக்கிறது. துணிகளை, "ரெடிமேட்" ஆடைகளைத் தயாரிக்கும் தொழில் பயன்படுத்திக் கொள்கிறது. ரசாயனத் தொழில், வேறு பல தொழில்களுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து தருகிறது.

இவற்றின் விளைவாக உருவான பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கப்பல் கட்டும் கூடங்களும், பொறியியல் தொழிற்சாலைகளும் உலோகங்களை வாங்குகின்றன. மோட்டார்த் தொழிற்சாலையும், மற்ற உலோகத் தொழிற்சாலைகளும்கூட இதில் கலந்துகொள்கின்றன. உலோகத் தொழில் துறையில், பண்டங்களை ஓரளவு தயாரிப்பவையாகவும், விநியோகிப்பவையாகவும், தயாரான பண்டங்களை ஏற்றுமதி செய்பவையாகவும் பல புதிய தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன.

ஆலந்தில் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களில் 43 சத விகிதம் பேர் தொழிலியல் துறையில் பணியாற்றுகிருர்கள். நாட்டின் வருமானத்தில் 45 சத விகிதம் இதிலிருந்தேஅடைகிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, தொழிலியல் உற்பத்தி இருமடங்காகியிருக்கிறது. 1947-ல் தொழிலியல் உற்பத்தியில் 15 சத விகிதமும், 1956-ல் 24 சத விகிதமும் நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த ஏற்றுமதிக்கு ஏற்ப கணிசமான அளவு இறக்குமதியும் இருந்தது. 1956-ல் இறக்குமதி ஏற்றுமதியாகியவற்றின் மொத்த அளவு, நாட்டின் வருமானத்தில் 87 சத விகிதமாக இருந்தது. ஆகவே, ஆலந்து, சுயேச்சை சர்வதேச வணிகத்தையும், மற்ற நாடுகள் வளமாக வாழ்வதையுமே மிகுதியாக நம்பியிருக்கிறது. ★



மதுரை எழுத்தாளர் மன்றச் செயற்குழுவினர்.

"தென்றல்"
பொங்கல் மலர்
விவரங்கள்
அடுத்த இதழில்
காண்க

- 2-ப் பக்கத் தொடர்ச்சி -

இர : பைரன்! இன்று நீங்கள் அதிகமாகப் பேசுகிறீர்கள். இவ்வளவு பேசாதீர்கள்; ஓய்வாக இருங்கள்!

பை : இனி ஒரேயடியாக ஓய்வெடுக்கப்போகிறேன். அதனால் தான் இவ்வளவு பேசுகிறேன். அணையப்போகும்தீபம் பிரகாசிக்கும் என்று கேட்டிருக்கிறீர்களா? அதனால்தான் இத்தனை தெளிவோடு பேசுகிறேன்.

என்னுடைய முப்பத்தொன்றாம் வயதில் இத்தாலிக்கு வந்தேன். அங்கேதான் நான் தெரஸாவைக் கண்டேன். தெரஸாவை உங்களுக்குத் தெரியாது. இங்கே - இந்த கிரேக்கர் உரிமைப்போரில் கலந்துகொள்ள நான் வந்தபோது; கப்பலின்மேல் தளத்தில் வந்து முத்தமிட்டு வழியனுப்பியவள் அவள். அப்போது அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள், தன் அன்பிற்குரிய பைரன் போர் முகாமில் பரவிய காய்ச்சலால் பாதிக்கப்படுவான்; அவள் இல்லாமல் அனாதையாக இன்னும் கொஞ்சநேரத்தில் மாண்டுவிடுவான் என்று.

இந்தத் தெரஸா பேரழகி. அவளை நான் முதலில் கண்டபோது அவளுக்கு இருபது வயது. அப்போது, ஏன் இப்போதுகூட அவள் அழகுப் புதையல். ஒயிலைத் தேக்கிவைத்திருக்கும் அவளுடைய நீண்ட நீலக்கண்களும், வளைந்த, சுருண்ட கூந்தலும், வாடாத இளமையும்... எல்லாமே அழகுதான். மதுக்கோப்பையின் விளிம்புக்கும், அவளுடைய உதட்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் விழித்திருக்கிறேன் நான், பல தடவைகளில். நடையில் ஒரு ஒயில்; உடையில் ஒரு ஒயில்; இடையில் ஒரு ஒயில்; விடையில் ஒரு ஒயில்; எல்லாவற்றிலுமே ஒயில்தான்!

அறுபது வயதுப் பிரபு ஒருவனின் மனைவியாக அவள் இருந்தாள். எனக்காக அவனை விவாக ரத்துச் செய்துவிட்டு என்னோடே வந்துவிட்டாள் அவள் ஆமாம்......எனக்காக; என்னோடேயே!

எத்தனையோ பெண்களை நான் சந்தித்திருக்கிறேன். ஏராளமான இரவுகளை அவர்களோடு கழித்திருக்கிறேன். ஆனால் அந்தத் தெரஸாவை மட்டும் என்னால் மறக்கவேமுடியாது.

கிரீஸ்! அதன் உரிமைப் போருக்குத்தான் நான் அவளிடம் விடைபெற்று வந்தேன். ஆனால் அந்தப் போர் நான் இல்லாமலே முடியப்போகிறது. தெரஸாவும் கிரீஸும் எனக்கு இரண்டு கண்கள்போல.

அதோ முடிவு வருகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சாகப் போகிறேன். சாகு முன்...ஐயோ! என்னுடைய கடந்தகால வாழ்க்கை திரும்பத் திரும்ப என்முன் வந்து நிழலாடி என்னை வாட்டி வதைக்கிறது. நான் சாக வேண்டும். அதுவும் விரைவிலேயே சாக வேண்டும். என்னால் இதைச் சகித்துக் கொண்டே இருக்கமுடியாது

நான் இன்று செத்துவிடுவேன். வாழ்விலே கிடைக்காத அமைதி, எனக்குச் சாவிலாவது கிடைக்கட்டும். அப்போது என் கல்லறையில் இப்படி எழுதுங்கள்: 'ஒரு கவிக்குயில் அமைதியாக இங்கே துயில் கொள்கிறது!'

சாவே! முடிவே! வா! ஓடோடி வா!

தெரஸா! கிரீஸ்!

(பைரன் கண்களை மூடுகிறான். முடிவு அவனை அணைத்துக்கொள்கிறது. நீங்காத துயிலில் ஆழ்ந்துவிடுகிறான்.)

பைரன்! பைரன்!

என்று அழுகிறார்கள் உடன் இருப்போர்! ★

பை : இல்லை. என்னைப் பேசவிடுங்கள். நான் பேசவேண்டும்.

நான் அப்போது மனிதனாகவே இல்லை. இந்த லட்சணத்தில் நான் முறையாக திருமணம் வேறு செய்துகொண்டேன். மில்பேங்க் அவள் பெயர். அவளும் ஒரு சீமாட்டிதான். என்மீதும் என் கவிதைகள்மீதும் கொள்ளை ஆசை அவளுக்கு. என் குழந்தை ஒன்று எட்டு வயதில் இருக்கிறது என்று சொன்னேனல்லவா; அது எங்கள் குழந்தைதான்.

அந்தப் பெண் குழந்தை பிறந்தபோது மில்பேங்க் மகிழ்ச்சியோடு என்னிடம் வந்து, 'நமக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது' என்றாள். அவளுக்கு நான் என்ன பதில் சொன்னேன் தெரியுமா? கேட்டால் சிரிப்பீர்கள். 'இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? ஆடுமாடுகள் கூடத்தான் குழந்தை பெறுகின்றன!'- இப்படி நான் சொன்னேன். அப்போது அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும். இப்போது அதை நான் நினைத்துப் பார்க்கிறேன். இப்படிப்பட்டவனோடு எவள்தான் வாழ விரும்புவாள்? நாங்கள் திருமணத்துக்கு அடுத்த ஆண்டே மணவிலக்குச் செய்துகொண்டோம்.

அடுத்த இதழில் ...
கண்ணதாசன்-
காலம்.

"ஆமை" பெற்ற குறட்பாக்கள்

கண்பெற்ற குறட்பாக்களை அடுத்து "ஆமை" பெற்ற குறட்பாக்களைக் குறித்தனுப்பச் சொல்லியிருந்தோம். முன்னர் சொன்னதுபோலவே குறளைப் பலமுறை கற்க வாய்ப்பளிக்கும் முயற்சியே இது. முந்திய போட்டியை விட இதில் நூற்றுக்கணக்கான தோழர்கள் அக்கறை காட்டியிருக்கின்றனர். ஈழத்திலிருந்தும், மலைநாட்டிலிருந்தும்கூட பல தோழர்கள் இதில் ஆர்வங்காட்டிக் கலந்திருக்கின்றனர். பம்பாய்த் தோழர்களும், கருநாடக மாணவர்களும், கேரளச் செல்வர்களும் நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர். இப்போட்டியால் தனது ஓய்வுநேரம் நல்ல முறையில் பயன்படுத்தப்படுவதாக ஒருவர் எழுதுகிறார் இன்னொரு சென்னைத் தோழர் "அலுவலகத்தில் ஓய்வில்லை, என்றாலும், கடைசி நேரத்தில் எழுத முடிந்த அளவு எழுதி இருக்கிறேன்" என்று குறிக்கிறார். தட்டெழுத்துப் பயின்றுவரும் ஒரு தோழர் ஆறு முறை, குறள் முழுவதையும் படித்ததாகத் 'தட்டுகிறார்.'

இன்னும் பலர் இப்போட்டியைப் பாராட்டி எழுதுவதோடு புதுப்புதுப் போட்டிகள் தொடங்குவதற்கான வழிகளையும் சொல்லியிருக்கின்றனர். அவை காலப்போக்கில் மேற்கொள்ளப்படும்.

"ஆமை பெற்ற **குறட்பாக்கள்**" என்று நாம் குறித்தபோதே அவை ஒன்றல்ல; பல என்பது விளங்கப் பெற்றிருக்கும். என்றாலும் பல தோழர்கள் நூற்று இருபத்தி ஆறாம் குறள் ஒன்றைமட்டும் குறித்தனுப்பினர்.

"கண்பெற்ற குறட்பாக்க"ளில் எப்படி இதன் கண்' அதன்கண்' 'வன்கண்' என்ற சொற்கள் ஒப்புக் கொள்ளப் பெற்றனவோ, அது போலவே ஈண்டும், "கொல்லாமை" 'வேண்டாமை" போன்றனவும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அவ்வாறு கணக்கிடப்பட்டதில் மொத்தம் 71 குறட்பாக்களில் 79 "ஆமைகள்" இருப்பதாக முடிவு செய்தோம். இவற்றுள் சில "ஆமைகள்" பதுங்கி இருக்கின்றன; சில வெளிப்படையாகவே வருகின்றன.

இப்போட்டிகளில் குறையாத ஆர்வங்காட்டும் தோழர்கள் அத்தனை பேருக்கும் "தென்ற"லின் வாழ்த்துக்கள். குறளை நீங்கள் திரும்பத் திரும்பப் படிக்கப் படிக்கப் புதுப்புது நயங்கள் தோன்றும். அவ்வாறு நீங்கள் உணர்ந்தறியும் நயங்களே "தென்றல்" தரும் பரிசுகள் அடுத்து "நோய்" பெற்ற குறட்பாக்களைக் 28-11-59-ம் நாளுக்குள் குறித்தனுப்பக் கேட்டுக்கொள்கிறோம்.

தோழர்கள் இவ்விதம் தங்களைப் பழக்கிக்கொள்வதன் மூலம் ஒரு பரிசுப்போட்டிக்குத் தங்களைத் தயார் செய்துகொள்கிறார்கள் என்பதை இரகசியமாகச் சொல்லிவைக்கிறோம்.

"அஃகாமை" "வெஃகாமை" என ஒன்றுக்கு மேற்பட்ட "ஆமை"கள் ஒரே குறளில் வந்திருப்பின், அவற்றை இரண்டாகக் கணக்கிட்டுக்கொள்கின்றனர் சிலர், ஆனால் குறட்பாக்களின் கணக்கையே நாம் கணக்கில் கேட்டிருப்பதால், ஒரு பாவில் எத்தனை ஆமைகள் இருந்தாலும் கணக்குக்கு வருவது ஒன்றே.

பட்டியலும் பங்குகொண்டோர் பெயர்களும் அடுத்த இதழில் வரும்.



விலைவாசிக் குறைப்புப் போராட்டம்.

விலைவாசிக் குறைப்புக்காக எல்லா இயக்கத்தவரும் கூடி நடத்தி வரும் எட்டு நாள் போரின் இறுதிக் கட்டமாக 22-11-'59 அன்று நாடெங்கும் கண்டனக் கூட்டங்களும் ஊர்வலங்களும் டக்க இருப்பதை நாமறிவோம். அக்கூட்டங்களை, எல்லா வெற்றி களையும் ஈட்டித்தரும் வகையில் நடத்தியுதவக் கேட்டுக்கொள்கிறோம்.

கண்டனக் கூட்டங்களில் நிறைவேற்றுதற்கென்று எல்லா இயக்கத்தவரும் கூடி வகுத்திருக்கும் தீர்மானத்தைக் கீழே தருகிறோம். இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதுடன் இதன் நகலை உடன் சென்னை மாநில முதலமைச்சருக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கின்றனர்.

இத்திங்கள் 24-ம் நாளுக்குப் பின்னர் ஒரு வசதியான நாளில் கீழ்க்கண்டோர் மாநில அரசினரைக் கண்டு, இத்தீர்மானத்தின் கருத்துக்களையும் போராட்டத்தின் குறிக்கோள்களையும் விளக்கிப் பேசி வருவர்.

தீர்மானம்.

(அ) ஏழை, நடுத்தர மக்களைப் பாதிக்கிற அளவில் உணவுப் பொருள்கள், இதர அன்றாடத் தேவைப் பொருள்களுடைய விலை விடம்போல் ஏறிக்கொண்டே போவதைத் தடுத்து, நியாய விலை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்கும் ஆட்சியாளர்களின் நியாயமற்ற போக்கை, இந்த சர்வகட்சிப் பொதுக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) சென்ற மாதம் 12-ந்தேதி சர்வ கட்சிக் குழுவின் சார்பில் முதலமைச்சரையும், உணவு இலாக்கா அமைச்சரையும் நேரில் சந்தித்து விலைவாசி ஏற்றம் பற்றியும், விலைவாசிக் குறைப்பு அவசியத்தைக் குறித்தும் தெளிவுபடுத்திய பின்பு, விலைவாசிக் குறைப்புக்கான எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காது. அதற்கு நேர் மாறாக, நடைமுறையில் இருந்த கொள் முதல் சம்பந்தமான சகல உத்தரவுகளையும் ஆட்சியாளர்கள் ரத்துச் செய்து தங்களுடைய பொறுப்பை அறவே கைவிட்டதைக் கண்டு இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த விபரீத போக்கை கைவிடும் வகையில் புனராலோசனை செய்ய வேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(இ) எப்படியும் விலைவாசியைக் குறைத்து நியாய விலை நடைமுறைக்கு வர ஆட்சியாளர்கள் எவ்வளவு உணவு தான்யக் கொள்முதல் செய்ய முன் வந்து, மக்களுக்கு நியாய விலைக்குத் தானியம் கிடைப்பதற்கான முழுப் பொறுப்பையும் அரசினரே ஏற்க வேண்டுமென இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

(ஈ) கொள்ளை லாபம் அடிப்பது உணவு தான்யத்தைப் பதுக்குவது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளை தயவு தாட்சண்யமின்றித் தண்டனைக்குள்ளாக்க, சட்டத்தைச் செயல்படுத்த ஆட்சியாளர்கள் முன்வர வேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

(உ) சென்ற மாதம் 12-ந்தேதி அமைச்சர்களைப் பேட்டி கண்டு சர்வகட்சிக்குழு அளித்த விண்ணப்பத்தில் கண்ட கோரிக்கைகளை இப்பொதுக் கூட்டம் உறுதி செய்வதுடன் அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நடவடிக்கையிலீடுபடும்படி இச்கூட்டம் மாநில சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(ஊ) இந்த சர்வகட்சிக் குழுவின் சார்பில் விலைவாசிக் குறைப்புக்கான பொது நோக்கோடு திரண்டு நிற்கும் பல பகுதி மக்களும் இந்த நோக்கம் வெற்றியுறும் வகையில் கட்டுப்பாடாகச் செயல்படுவதென்ற உறுதியை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தூதுக்குழுவினர் பட்டியல் :

திரு. ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்).
,, எம். ஆர். வெங்கட்ராமன் (பொதுவுடைமை)
,, என். வி. நடராசன் (தி. மு. க.)
,, க. அப்பன்ராசு (சோசலிஸ்ட்)
,, சி. ஆ. வரதராசன் (நாம் தமிழர்)
,, ஆர். இராமநாதன் (புரட்சிகர சோசலிஸ்ட்)
,, எம். லசபதி (புரட்சிகரத் தொழிலாளர் சங்கம்)
,, என். சம்பத் (சென்னை மாநில வங்கி அலுவலர் பெருமன்றம்)
,, மணலி கந்தசாமி (பொதுவுடைமை)

இம்முடிவுகள் கடந்த 16-11-'59 அன்று அக்குழுவினர் கூடியபோது செய்யப்பட்டன.

மதுரை எழுத்தாளர் மன்ற இரண்டாமாண்டு விழாவில் பங்குகொண்ட தலைவர்களும் கவிஞர்களும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம். எ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு. சென்னை-6, தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.